நன்றி - நூலகத்திட்டம்


# புதிய பூமி

PUTHIYAPOOMI

புதிய பூமி

சுற்று 04 ஆகஸ்ட் 1997 சுழற்சி 13 பக்கம் 12 விலை ரூபா 10/=


### முன்னொரு நாட் சுட்டவெடி

துரோகி எனத் தீர்த்து
முன்னொரு நாட் சுட்டவெடி
சுட்டவனைச் சுட்டது
சுடக் கண்டவனைச் சுட்டது
சுடுமாறு ஆணை
இட்டவனைச் சுட்டது
குற்றம் சாட்டியவனை
வழக்குரைத்தவனைச்
சாட்சி சொன்னவனைத்
தீர்ப்பு வழங்கியவனைச் சுட்டது
தீர்ப்பை ஏற்றவனைச் சுட்டது
எதிர்த்தவனைச் சுட்டது
சும்மா இருந்தவனையுஞ் சுட்டது.

நன்றி:தாயகம் 21-ஜனவரி - பெப் 1990

# தனிநபர் படுகொலைகள் நிறுத்தப்பட வேண்டும்

**கடந்த யூலை மாதத்தில் திருகோணமலை மாவட்டத்தில் இரண்டு படுகொலைச் சம்பவங்கள் இடம் பெற்றிருக்கின்றன. பாராளுமன்ற உறுப்பினர்கள் அ.தங்கத்துரை, எம்.ஈ.எச்.மக்றூஃவ் ஆகியோர் இரு வேறு இடங்களில் வைத்து கொல்லப்பட்டுள்ளனர். அவ்விரு சம்பவங்களில் அவர்களுடன் கூடவே இருந்த பத்துப் பேர்களும் கொல்லப்பட்டுள்ளனர். இவை அப்பட்டமான அரசியல் படுகொலைகள் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. எத்தகைய சூழலிலும் இது போன்ற தனிநபர் அரசியல் படுகொலைகள் ஏற்றுக் கொள்ளத்தக்கன அல்ல. அவை வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியவையாகும்.**

மேற்படி கொலைகளை யார் செய்திருப்பார்கள் என்பதில் உண்மைகளை விட ஊகங்களே அதிகம். புலிகள் தான் செய்திருப்பார்கள்



என ஒரு சாராரும் அவர்கள் செய்திருக்க மாட்டார்கள் அப்படிச் செய்திருப்பின் அதில் நியாயம் இருக்கவே செய்யும் என மறு சாராரும் பேசுவதைக் கேட்க முடிகிறது. அரசாங்கம் புலிகள் தான் என அடித்துக் கூறுகின்றது. ஆனால் புலிகள் செய்திருக்க மாட்டார்கள் என்று கூறுவதற்கும் எவ்வித உத்தரவாதமும் கூறமுடியாது. இதில் வெவ்வேறு சக்திகளின் கரங்களும் செயல்பட்டிருக்கலாம் என்பதையும் நிராகரிக்க முடியாதுள்ளது.

இத்தகைய ஊகங்கள் பழிசுமத்தல்கள் நியாயப்படுத்தல்களுக்கும் அப்பால் இலங்கையின் அரசியல் படுகொலைகளின் வரலாற்றுச் சூழலை பின் நோக்கி பார்ப்பது இவ்வேள்ள அவசியமாகின்றது. ஏனெனில் அண்மையில் இடம் பெற்ற அரசியல் படுகொலைகள் முதல் தடவையானதும் அல்ல முடிவான ஒன்றும் அல்ல. கடந்த கால் நூற்றாண்டு கால இலங்கையின் அரசியல் பரப்பிலே தொடர்ான ஏராளம் அரசியல் படுகொலைகள் இடம்பெற்று வந்துள்ளன. அவற்றை வரிசைப் படுத்தினால் நூற்றுக்கணக்கில் ஆயிரக்கணக்கில் பல்லாயிரக் கணக்கில் எனப் பட்டியிலிட முடியும். இதற்கு வழிவகுத்தவர்கள் வழிகாட்டியவர்கள் பங்கு கொண்டவர்கள் படுகொலையில் ருசி கொண்டவர்கள் எனப் பலரை அடையாளப்படுத்தலாம். தமிழ்த் தலைவர்கள், ஐக்கிய தேசியக் கட்சியினர் அரசாங்க ஆயுதப் படைகள், தமிழ்த் தீவிரவாத இயக்கங்கள், பச்சை நிறக் குண்டர்கள் - பாதாள உலகத்தினர், ஜே.வி.பி. இயக்கத்தினர், முஸ்லீம் தீவிரவாத சக்திகள் ஆகியோர் இத் தனிநபர் படுகொலைகளில் தாராள பங்கினை வகித்து வந்துள்ளனர். இதனால் இலங்கை கொலைக் கலாச்சாரத்தைக் கொண்டுள்ள ஒரு நாடாகத் திகழ்வதைக் காணலாம். பரவி நிற்கும் இத் தனிநபர் படுகொலைக் கலாசாரம் இதுவரை பரவாத ஒரு பகுதி இருக்குமானால் அது மலையகத் தமிழ் அரசியல் பரப்பாக மட்டுமே காணப்படுகிறது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாறு ஒரு பரந்த படுகொலைக் கலாச்சாரத்தைத் தோற்றுவித்து வளர்த்து அதன் மூலம் தமது சொந்த சொத்து சுக அதிகார வேட்டைகளைத் தீர்த்துக் கொண்டவர்களில் இறந்து போனவர்களை விட இன்னும் உயிரோடு இருப்பவர்கள் அரசியல் களத்திலே இருந்து வரவே செய்கிறார்கள். கடந்த கால மனித



உயிர் அழிப்பின் பழிபாதகங்களைச் சுமந்த நிலையில் தான் அத்தகையோர் இன்றும் ஜனநாயக வேடத்துடன் அரசியல் நடாத்தி வருகிறார்கள் என்பது சுட்டிக் காட்டப்பட வேண்டிய

(தொடர்ச்சி பக்கம் 11 இல்)

### ஒரு ஓநாய் அழுகிறது

யுத்தத்திற்கு எதிராக குரல் கொடுக்கும் 'சமாதான வீரர்கள்' சிலருக்கு அமெரிக்க தூதரகம் அனுசரணை வழங்கி வருவதாக பரவலாக கதைக்கப்படுகிறது. அமெரிக்க 'அனுசரணையை' பெற்ற சில தமிழறிஞர்களும் சில சிங்கள அறிஞர்களும் இலங்கையில் யுத்தத்தை நிறுத்தவும் சமாதானத்தை நிலைநாட்டவும் அமெரிக்கா அக்கறையுடன் இருப்பதாகவும், சமாதான இயக்கங்களுக்காக அமெரிக்காவிடமிருந்து நிதியுதவியையும் பெற முடியும் என்றும் பிரச்சாரம் செய்ய ஆரம்பித்துள்ளனர்.

கோப்பையில் நெய் ஊறுகிறது என்றால் கேட்பாருக்கு மதி எங்கே போயிற்று?

### பெறுமதிமிக்க 'குடு'

இலங்கைக்குள் வருடாவரும் ஐம்பது லட்சம் ரூபா பெறுமதியான போதைப் பொருள் கடத்தி வரப்படுகின்றது. இன்று கொழும்பில் சந்திக்கு சந்தி 'குடு' என்னும் பெயரில் தாராளமாக விற்பனையாகுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### அமெரிக்காவின் வேஷம்

இலங்கையில் யுத்தத்தை நிறுத்தி அரசியல் தீர்வை கொண்டு வருவதற்கு அமெரிக்கா பாடுபடுவதாக பிரசாரம் செய்யப்படுகிறது. ஆனால் அரசியல் தீர்வை எதிர்க்கும், அரசியல் தீர்வுப் பொதியை நாட்டை துண்டாடும் திட்டம் என்று கூறும் ஜே.வி.பிக்கு அமெரிக்க தூதரகம் ஆசீர்வாதம் வழங்கியுள்ளது என்பது பகிரங்கப்படுத்தப்பட்டுள்ள உண்மை.

### நீதியை காப்பவர்கள்

கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் தமிழர்கள் படுகின்ற பாட்டை எல்லோரும் அறிவர். 'புலிகள்' என்று சந்தேகத்தில் கைதுசெய்யப்படுபவர்களை பிணையில் எடுக்கவோ, விடுவிக்கவோ செல்பவர்கள் மொழி தெரியாமல் படுகின்ற அவஸ்தையுடன் பல விதமான சுரண்டல்களுக்கும் ஆளாகின்றனர். 'சட்டத்தரணிகள் என்று கூறிக்கொண்டு சிலர் தமிழர்களின் அடையாள அட்டைகளை பிடுங்கி வைத்துக் கொண்டு வழக்கு காசிற்குப் ப்திலாக பெருந் தொகைப் பணத்தை அபகரித்து வருவதாக செய்திகள் பரவியுள்ளன.

## மேதின ஊர்வலம் தடுக்கப்பட்டமை தவறானது உயர் நீதிமன்றம் தீர்ப்பு

கடந்த வருடம் மேதினத்தன்று நவசமசமாஜக் கட்சியின் ஊர்வலத்தை தடுத்து நிறுத்தியமை ஒரு அடிப்படை உரிமை மீறலாகும். அது ஒரு தவறான செயல் என உயர்நீதிமன்றம் தனது தீர்ப்பு ஒன்றில் தெரிவித்துள்ளது. பொலீஸ் சட்டங்களை விட அரசியலமைப்பில் கூறப்பட்டவைகளே மேலானவை என்பதையும் உயர் நீதிமன்றம் சுட்டிக் காட்டியுள்ளது. மேற்படி அடிப்படை உரிமை மீறல் வழக்கைத் தொடுத்த நவசமசமாஜக் கட்சி உறுப்பினருக்கு வழக்குச் செலவுத் தொகையாக 15,000/= ரூபா செலுத்தும் படியும் உயர்நீதிமன்றத் தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது.

1996 ம் ஆண்டு மேதினத்தன்று நவசமசமாஜக் கட்சியின் தலைமையில் தொழிற்சங்கங்களும் வேறு இடதுசாரி அமைப்புகளும் மேதின ஊர்வலத்தை நடத்த முற்பட்ட போது பொலீஸ் அதனைத் தடுத்து ஊர்வலத்தினர் மீது தாக்குதலையும் நடாத்தியது. அதனால் ஊர்வலத்தின் தலைவர்களும் பங்கு கொண்டோரும் கடும் காயங்களுக்கு உள்ளாகினர். பொதுசன ஐக்கிய முன்னணி ஆட்சியில் இவ்வாறு இடது சாரி தொழிலாளர் இயக்கம் இரத்தம் சிந்த வேண்டி ஏற்பட்டது தொழிலாளி வர்க்கத்தை ஆத்திரமடைய வைத்தது.

கருத்துச் சுதந்திரம் எழுத்துச் சுதந்திரம் கூட்டம் கூடும் உரிமை என்பன பற்றி அரசியல் அமைப்பில் அழகாகக் கூறப்பட்டுள்ள போதிலும் ஆட்சியினர் தமது அரசு யந்திரமான பொலிஸ் மூலம் எதிர் கருத்துக் கொண்டோரை அடக்கும் நோக்குடனேயே மேற்படி ஊர்வலத்தைத் தடுத்து தாக்கினர். இதை எதிர்த்தே நவசமசமாஜக் கட்சியின் சார்பில் உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் வழக்குத் தொடுக்கப்பட்டது. அதன் அடிப்படையிலேயே மேற்படி தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இத் தீர்ப்பை தொழிலாளி வர்க்கமும் இடதுசாரி இயக்கங்களும் வரவேற்றுள்ளன. அதே வேளை இடதுசாரிகள் எனப்படுவோரும் குந்தியிருந்து கொண்டே நேர்மையான இடதுசாரிகள் நடத்திய ஊர்வலத்தை பொலீஸ் மூலம் தடுத்துத் தாக்கிய பொது சன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் இச் செயலுக்கு மேற்படி தீர்ப்பானது முகத்தில் கரியைப் பூசியுள்ளது என்றே கூறுதல் வேண்டும்.

### கிழக்கு மாகாண நட்சத்திரம்

அம்பாறையில் கச்சேரியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டத்தில் உரையாற்றுவதற்காக கொழும்பிலிருந்து போய் இறங்கிய கிழக்கின் முழு அமைச்சர் பார்வையாளர்கள் யாருமே இல்லாததால் சோர்ந்து விடவில்லையாம். அம்பாறை கச்சேரியில் வேலை செய்யும் சிற்றூழியர்களை திட்டித் தீர்த்து கூட்டத்திற்கு ஆட்களை அழைத்துக் கொண்டுவரும்படி துரத்திவிட்டாராம். பாவம் சிற்றூழியர்கள்; ஓரிரு மணித்தியாலங்களில் 'சில்லரை' பார்வையாளர்களாக கொண்டு வந்து சேர்த்தனராம். அவ்வளவு நேரமும் பொறுமையுடன் இருந்த கிழக்கின் முழு அமைச்சர் அந்தச் சிலரின் முன்னால் பொறுமையிழந்தவராய் பேசினாராம்.

நன்றி - நூலகத்திட்டம்



## மலையக உள்ளக கட்டமைப்புக்கு 50 சதம் ஒதுக்க அரசாங்கம் மறுப்பு

தோட்டப்புற உள்ளக கட்டமைப்பு வேலைகளை முன்னெடுப்பதற்காக போதுமான நிதியை பெற்றுக்கொள்ள தொண்டமான் முன்வைத்த யோசனை நிராகரிக்கப்பட்டுள்ளது.

தேயிலைத் தோட்டங்களில் பறிக்கப்படும் தேயிலை கொழுந்தின் விலையிலிருந்து ஒரு கிலோவிற்கு 50 சதம் என்ற அடிப்படையில் ஒதுக்கி தோட்டப்புற உள்ளகக் கட்டமைப்பிற்கான நிதியத்தை உருவாக்க வேண்டும் என்று கால்நடை அபிவிருத்தி தோட்டப்புற உள்ளகக் கட்டமைப்பு அமைச்சர் தொண்டமான் ஜனாதிபதியை கோரியிருந்தார்.

நடைபெற்ற நேரடி சந்திப்பில் கொள்கையளவில் தொண்டமானின் மேற்படி யோசனையை ஜனாதிபதி ஏற்றுக் கொண்டதாக அறியமுடிகிறது. ஆனால் பொதுஜன ஐக்கிய முன்னணியின் அமைச்சர்களும் எம்.பிக்களும் எதிர்ப்பதாக காரணம் காட்டி தொண்டமானின் மேற்படி யோசனையை ஜனாதிபதி கடிதம் மூலம் நிராகரித்துள்ளார் என்று அறிய முடிகிறது.

தோட்டப்புற உள்ளகக் கட்டமைப்பு அமைச்சின் மூலம் மேற்கொள்ள வேண்டிய விடயங்கள் பற்றி பலரின் அபிப்பிராயங்களையும் அமைச்சர் (வழமைக்கு மாறாக) கேட்டதாகத் தெரிகிறது. தோட்டப்புற உள்ளகக் கட்டமைப்புகளை மிகவும் விரைவாக ஏற்படுத்த எண்ணம் கொண்ட தொண்டமான் அரசாங்கம் ஒதுக்கும் நிதி போதாது என்று கண்டார். அதற்கான மேலதிகமாக நிதியைப் பெறுவதற்காக பறிக்கப்படும் தேயிலைக் கொழுந்து ஒரு கிலோவிற்கு 50 சதத்தை உள்ளகக் கட்டமைப்பு நிதியத்தை ஏற்படுத்த வேண்டும் என்றும் அந்நிதியிலிருந்து உள்ளகக் கட்டமைப்புகளை நிர்மாணிக்க நிதியைப் பெற முடியும் என்றும் ஜனாதிபதியிடம் யோசனை தெரிவித்திருந்தார்.

நேரடி சந்திப்பின் போது கொள்கையளவில் தொண்டமானின் யோசனை ஏற்றுக் கொண்ட ஜனாதிபதி பின் அதனை நிராகரித்துள்ளார்.

இதிலிருந்து தோட்டப்புற உள்ளகக் கட்டமைப்பிற்கு போதுமான நிதி கிடைக்கப் போவதில்லை என்பது தெளிவாகிறது.

இந்நிலைமையில் பெயருக்காக தோட்டப்புற உள்ளகக் கட்டமைப்பு என்ற அழகான பெயருடன் ஒரு அமைச்சை ஜனாதிபதி ஏற்படுத்தியதாலோ, அவ்வமைச்சு தொண்டமானிடம் கொடுக்கப்பட்டதாலோ எவ்வித பிரயோசனமும் ஏற்படப் போவதில்லை.

மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் ரத்தத்தை உறிஞ்சியே இந்நாட்டின் அந்நிய செலாவணி சேகரிக்கப்படுகிறது. அந்தத் தொழிலாளர்களின் உழைப்பிலேயே அரசாங்கமும் அமைச்சுக்களும் ஏன் ஜனாதிபதியும் கூட ஆடம்பரச் செலவுகள் செய்கிறார்கள். நாளாந்தம் கோடிக் கணக்கில் யுத்தத்திற்குச் செலவிடுகிறது அரசாங்கம். ஆனால் தோட்டத் தொழிலாளர்களின் அடிப்படை ஜீவாதாரமான விடயங்களை உள்ளடக்கியுள்ள உள்ளக கட்டமைப்புக்கு ஒரு கிலோ தேயிலை விலையில் ஐம்பது சதத்தை ஒதுக்க அரசாங்கம் மறுப்பது ஏன்? அங்கே தான் மாற்றாந்தாய் மனப்பான்மை, இரண்டாந்தரப் பிரஜைகள் என்ற போக்கு மேலோங்கி நிற்பதைக் காண முடியும். இந்த அரசாங்கத்திடம் கெஞ்சிக் கேட்டாலும் சரி கொஞ்சிக் கேட்டாலும் எதுவுமே கிடைக்கப் போவதில்லை என்பதற்கு அமைச்சர் தொண்டமானின் ஐம்பது சதக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டமையே போதுமானஉதாரணமாகும்.

## மலையகத்தை சிதைக்கும் புதிய கிருமி

மலையகம் தமிழ் மக்கள் செறிந்து வாழும் பிரதேசமாக இருப்பதும் நாட்டின் தொழிலாளர் வர்க்கம் ஐக்கியத்துடனும் ஒற்றுமையாகவும் இருக்கும் பிரதேசம் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். இன்று தேசிய, சர்வதேச ரீதியாக தொழிலாளர் வர்க்கத்திற்கு எதிரான பல செயற்பாடுகளை நடத்திச் செல்லும் சக்திகளுக்கு இது அச்சத்தை ஏற்படுத்தும் விடயமாக இருப்பது நாம் அறிந்ததே. எதிர்காலத்தில் இத்தொழிலாளர் சக்தியானது பாரிய சக்தியாக உருவெடுத்து எதிர்சக்திகளுக்கு சவாலாக இயங்கும் என்ற பயத்தினால் தொழிலாளர்களின் ஐக்கியத்தை சிதைப்பதற்காக பல சூழ்ச்சிகளை சிலர் நடாத்தி வருகின்றனர்.


இவற்றை நுணுக்கமாக ஆராயும் போது மலையகத்தை நோக்கி படை எடுக்கும் மதம் பரப்பும் கூட்டங்களும் சிறிய கிறிஸ்தவ சபைகளும் எவ்வாறான செயற்பாடுகளை செய்து தொழிலாளர்களின் ஐக்கியத்தை உடைக்கின்றார்கள் என்பதை இனங்காண வேண்டிய நிர்ப்பந்தம் எமக்கு ஏற்பட்டுள்ளது. அமெரிக்க ஏகாதிபத்தியமானது வியட்னாமிற்கு எதிரான தமது நடவடிக்கைகளின் ஆரம்ப படியாக வியட்னாம் மக்களுக்குரிய கலாச்சாரத்தை சிதைப்பதற்கான செயற்பாடுகளை செய்ததை நாம் அறிந்தோம். கலாச்சாரம், மதம், மொழி என்பன ஒரு மக்கள் கூட்டத்தின் தனித்துவத்தைக் காட்டும் அடையாளங்கள் இந்த அமைப்பினை உடைப்பதன் மூலம் இவர்களின் வாழ்க்கை முறையில் மாற்றத்தினை ஏற்படுத்தி போராட்ட உணர்வினை இல்லாமல் செய்வதே இதன் முக்கிய நோக்கமாகும்.

மலையகத்தில் இம்மதவாதிகள் மக்களின் வறுமையை ஆயுதமாக கொண்டு அற்ப உதவிகளைச் செய்கின்றனர். இதன் மூலம் மக்களின் மனங்களை கவர்ந்து அவர்களை தங்கள் பால் திருப்பும் மதவாதிகள் மற்றைய சமயத்தைப் பின்பற்றும் மக்களின் குறைகளை கூறி ஒரு பகுதியினரை மற்றைய பகுதியினருக்கு எதிரானவர்களாக மாற்றுவது ஒரு வேலைமுறையாகும். இதன் காரணமாக குடும்ப அங்கத்தினர்கள் மத்தியிலேயே மத அடிப்படையில் பிளவுகளை ஏற்படுத்தி வருகின்றனர்.

மதவாதிகள் குரோத நோக்குடன் தோட்டங்களுக்குள் ஊடுருவதை தோட்ட கம்பனிகளோ தொழிற்சங்கங்களோ எதிர்ப்பதாக இதுவரை அறியவில்லை. மக்களின் மனோநிலை மாற்றப்பட்டு மக்கள் ஐக்கியம் சிதைக்கப்படுவதை எதிர்த்து குரல் கொடுக்க வேண்டியது அனைத்து மலையக நலன் விரும்பிகளினதும் பொறுப்பானதாகும்.

மலையகம் எங்கும் ஆயிரக்கணக்கான மதக் குழுக்கள் வந்து குவிகின்றன. இவற்றை நோக்கும் போது இவர்களின் தீவிர மதப் பிரச்சாரத்திற்காக கோடிக் கணக்கான பணம் விரயமாக்கப்படுவதும் இரவு பகலாக வழிபாடுகளை நடத்தி பாடசாலை மாணவர்களின் கல்வியை பாதிப்படைய செய்து வருவதையும், பரீட்சை காலங்களில் கூட பாசறைகளை நடத்தி மாணவர்களின் எதிர்காலத்தை பாழடைய செய்வதையும் காணக்கூடியதாக இருக்கின்றது.

**கிங்ஸ்லி கோமஸ்**



## டெய்லி நியூஸ் புனைகதைத் தொடர்

ரிவிரஸ நடவடிக்கை தொடங்கிய நாள் முதலாக அரச படைகள் அங்குலம் அங்குலமாகவும் கணநேரத்தில் காத தூரமாகவும் முன்னேறி வந்ததைப் பற்றி நாளாந்தம் கொட்டை எழுத்தில் செய்தித் தலையங்கங்கள் வெளியிட்டு வந்தது 'டெய்லி நியூஸ்' ஆங்கில நாளேடு.

திடீரென்று யூன் முடிவின் முன் ஒருநாள் பிரபாகரன் நாட்டை விட்டுத் தப்பியோடவும் தனது குடும்பத்தை முதலில் வெளியே அனுப்பவும் முயற்சி செய்வதாக ஒரு பரபரப்புச் செய்தியை வெளியிட்டது. அதற்கான ஆதாரம் என்று அதிகம் இல்லை. யாரோ அயல்நாட்டில் பிரபாகரனுக்கு இயக்கத்துக்குள் ஆதரவு குறைந்து போவதாகச் சொன்னதை வைத்து அவசரமாகச் சோடிக்கப்பட்ட கதைதான் இது.

இந்தக் கதை இப்போது அடிபட்டுப்போய் விட்டது. இந்தக் கதை ஏன் வந்தது என்று யோசித்துப் பார்த்தால் 'வெற்றி நிச்சயம்' நடவடிக்கை தனது 'துரிதமான முன்னேற்றத்தின்' திசையை மாற்றி விட்டது மட்டுமே காரணம் என்று தென்படுகிறது. இந்த விஷயம் கொட்டை எழுத்தில் எழுத முடியாத ஒன்று என்பதால் பிரபாகரன் பற்றிய புனைகதை ஒன்று முக்கியமான போர்ச்செய்தியாகி விட்டது. டெய்லி நியூஸ் யாரை ஏமாற்ற நினைக்கிறதோ தெரியவில்லை. ஈற்றில் முட்டாளாகுவது டெய்லி நியூஸ் ஆசிரியன் குழுவாகவே இருக்கும்.

## தங்கத்துரை கொலை

தமிழ் அரசியல் தலைவர்களது கொலைகள் கொஞ்சம் நின்று போய்விட்டது போல இருந்தது. சில காலம் முன்பு கரவை கந்தசாமி இறந்த போது விடுதலைப் புலிகள் மீது சந்தேகம் விழுந்த பின்பு உண்மை வேறாக இருக்கலாம் என்று தெரியவந்தது.

இப்போது நடந்த இக்கொலை பற்றிய சந்தேகம் தவிர்க்க முடியாமல் விடுதலைப் புலிகள் மீது விழுத்தப்பட இடமுண்டு. எவ்வாறாயினும் இது அரசாங்கத்தின் பாதுகாப்பு ஆற்றல் பற்றி வலுத்த ஐயங்களை எழுப்புகிறது.

மிகுந்த கட்டுப்பாட்டுடன் மனிதரதும் பொருட்களதும் போக்குவரத்து கட்டுப்படுத்தப்பட்டு வரும் திருகோணமலையில் ராணுவ, பொலிஸ், கடற்படைச் காவல்களை மீறி எவ்வாறு இது நடந்தது? அரசின் எதிரிகள் செய்தார்களென்றால் அரசாங்கம் எவரது பாதுகாப்புக்கும் உத்தரவாதம் தரமுடியாது என்று உறுதியாயிற்று.

அரசின் எதிரிகள் செய்திராவிட்டால், அது அதைவிட ஆபத்தான ஒரு நிலைமையையே அடையாளம் காட்டுகிறது. ஏனெனில் கடந்த சில ஆண்டுகளாக திருகோணமலை நகரின் தமிழ்மக்களது இருப்பு பலவிதமான பேரினவாத நெருக்குவாரங்கட்கு உட்பட்டு வந்துள்ளது பற்றி அதிகம் இரகசியமில்லை.

## எல்லாரும் ஏறி விழுந்த குதிரை

பேரினவாதம் என்பது மிகவும் ஆபத்தான ஆயுதம் என்பதை யார் அறியாவிட்டாலும் இடதுசாரிகள் அறிய வேண்டும். குறுகிய கால இலாபத்துக்காகவேனும் பேரினவாத அரசியலில் கை வைக்கும் ஒரு இடதுசாரி இயக்கம் தனது இறுதிக்காலம் வரை அக்களங்கத்தை மறக்க முடியாது போய்விடும். 1966 ல் சிங்களப் பேரினவாதக் கூச்சலிட்ட ஆர்ப்பாட்டத்தில் பங்கு பற்றிய கெனமன் -விக்கிரமசிங்ஹவின் தலைமையிலான வலது கம்யூனிஸ்ட் கட்சியும் சமசமாஜிகளும் அதன் மூலம், வடக்கில் இடதுசாரிகள் எல்லோர் மீதும் தமிழரசுக்கட்சி களங்கம் சுமத்துவதற்கு வசதி செய்தார்கள். பாராளுமன்ற ஆசனங்கட்காகவும் மந்திரிப் பதவிகட்காகவும் கொள்கையைத் தியாகம் செய்த இந்தத் தியாகச் செம்மல்களின் அரசியல் சோக வரலாறு 1977 ல் ஒரு இடதுசாரி கூட தேர்தலில் வெல்ல முடியாத அவலத்துடன் மேலும் பரிதாபமாக மாறியது.

இன்று ஸ்ரீ.ல.சு.கட்சியின் தயவில் பாராளுமன்றத்தில் பதவியில் அமர்ந்திருக்கும் வலது கம்யூனிஸ்ட் கட்சி மூன்று வருடங்கள் முன்பு முன்னாள் ஜனாதிபதி விஜேதுங்க சொன்னதை இந்நாள் ஜனாதிபதி ஒரு வருடம் முன்பு சொல்லக் கேட்டு இப்போது நமக்குச் சொல்கிறார்கள்: ''இலங்கையில் உள்ளது தேசிய இனப்பிரச்சினையல்ல பயங்கரவாதப் பிரச்சனையே''

கம்யூனிஸ்ட் கட்சியின் சீரழிவின் மத்தியிலும் இனவாதத்திற்கு தன்னைப் பலியாக்காத சிறப்பு வலது கம்யூனிஸ்ட் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த சரத் முத்தெட்டுவேகம அவர்கட்கு இருந்தது. 1987 ல் அவர் மரித்த போது சண்முகம் சிவலிங்கம் எழுதிய வரிகள்:

*''நீ இருந்த வரை*
*நீதான்*
*இந்த மைவிருட் காட்டின்*
*ஒரே மின்மினி''*

இன்று பேரினவாத முரட்டுக் குதிரையில் ஏறிச் சறுக்கி விழுந்த சக்கடத்தாரின் கதைதான் வலது கம்யூனிஸ்ட்கட்கு நடக்கிறது. இதை நோக்கும் போது, கவிதை வரிகளில் வருகிறது போல வலது கம்யூனிஸ்ட் கட்சியின் அற்ப இறுதி நம்பிக்கையும் சரத் முத்தெட்டுவேகம வுடன் போய்விட்டது போலவே தெரிகிறது.

## எசமானரின் மாட்டிறைச்சி

விசர் மாட்டு வியாதி எனப்படும் மூளை நோயால் பிரித்தானிய மாடுகள் கணிசமானளவு பீடிக்கப்பட்டதனால் ஐரோப்பிய சமூகம் பிரித்தானிய மாட்டிறைச்சி ஏற்றுமதிக்குத் தடை விதித்திருந்தது. இத் தடையுத்தரவை நீக்க வேண்டின் சில நிபந்தனைகளை நிறைவேற்றியாக வேண்டும் எனவும் கூறப்பட்டது. இதனால் பிரித்தானிய பண்ணைத் தொழிலதிபர்களின் லாபம் பாதிக்கப்பட்டது. எனவே, களவாக மாட்டிறைச்சி ஏற்றுமதி நடைபெற்றுள்ளது. இவ்வாறு ஏற்றுமதி செய்யப்பட்ட மாட்டிறைச்சியில் கணிசமான அளவு சென்ற ஆண்டு கென்யாவுக்கு அனுப்பப்பட்டது. அதில் நோயுண்ட மாடுகளின் மாமிசமும் அடங்கும் என்று அறியப்பட்டுள்ளது. இது மூன்றாமுலக மக்கள் எக்கேடு கெட்டாலும் லாபம் கைக்கு வந்தால் போதும் என்று எண்ணுகிற முதலாளித்துவத்தின் நடத்தை. இந்த விதமான கொலை பாதகச் செயலை நடைமுறைப் படுத்துவதில் ஏகாதிபத்தியவாதிகட்கு உடந்தையாக கென்யாவினது ஊழல்மிக்க சர்வாதிகார ஆட்சிக்கு என்ன பங்கு என்பது ஒரு முக்கியமான கேள்வி.

நகலம்: NI சஞ்சிகை

## சர்வதேச மன்னிப்புச்சபை அறிக்கையும் ஐலன்ட் ஏடும்

ஏ.ஐ.என அறியப்படும் சர்வதேச மன்னிப்புச்சபை தனது அண்மைய அறிக்கையில் விடுதலைப்புலிகளது மனித உரிமை மீறல்களைச் சாடியுள்ளதாக ஐலன்ட் 25/4 ல் மகிழ்வுடன் செய்தி வெளியிட்டுள்ளது. இலங்கை அரசின் மனித உரிமை மீறல்கள் பற்றி ஏ.ஐ. எதுவுமே சொல்வதில்லையா? அந்த அறிக்கைகள் ஏன் இங்குள்ள சிங்கள, ஆங்கில, நாளேடுகளில் வருவதில்லை? அதுபோன்றவை எப்படியாவது இங்கு அறியப்படும் போது, ஐலன்ட் போன்ற சிங்கள பௌத்த 'தேசபக்த' ஏடுகள் ஏன் அந்நியத் தலையீடு பற்றி ஆத்திரம் தெரிவிக்கும் கட்டுரைகளை வெளியிடுகின்றன?

நன்றி - நூலகத்திட்டம்




# புதிய பூமி

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

S - 47, 3வது மாடி
கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி
கொழும்பு - 11
தொலைபேசி :435117, 335844


## இதுதான் விடுதலையா?

தமிழர்கள் அத்துமீறி கைது செய்யப்பட்டால் ஜனாதிபதி செயலகத்துக்கு முறையிடலாம் என்று ஜனாதிபதி அறிவித்தார். அவ்வாறு அறிவிப்பதற்கென ஜனாதிபதி செயலக பெக்ஸ் நம்பரும் பத்திரிகைகளில் வெளியாகி இருந்தது. ஜனாதிபதி அறிவிப்பு செய்த தினத்தன்று இரவுதான் கொழும்பில் அதிகமான தமிழர்கள் கைது செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து கொழும்பு லொட்ஜ்களில் தங்கியிருந்த தமிழர்கள் நள்ளிரவில் வீதிகளில் விடப்பட்டனர். பல லொட்ஜ்கள் மூடப்பட்டன. இரவு படுக்கை உடை அணிந்த நிலையில் பெண்கள் கொழும்பு நகர வீதிகளில் விடப்பட்டனர். பெண்கள் பலர் கைது செய்யப்பட்டனர்.

தனிப்பட்ட கோபங்கள், குரோதங்களுக்காகவும் அப்பாவி தமிழர்களை பொலிசாருடன் இருக்கும் ஒரு சில தமிழர்கள் காட்டிக் கொடுத்து வருவதாக பரவலாக பேசப்படுகிறது. பொலிசாருடன் இருக்கும் ஒரு சில தமிழர்கள் கைது செய்யப்பட்டவர்களை விடுவிப்பதில் 'ஒரு பெரிய வியாபாரத்தையே' நடத்தி வருவதாக தெரிகிறது. தமது பிள்ளைகளின் விடுதலைக்காக பொலிசாருடன் இருப்பதாக காட்டிக் கொள்ளும் தமிழர்களிடம் பெருந்தொகைப் பணத்தைக் கொடுத்த பெற்றோர்கள் அதிகம். வேறும் சில இழப்புகளுக்கு உள்ளாகி வருகின்றனர்.

கருத்துவேறுபாடுள்ளவர்களை பொலிசாருக்கூடாக கைது செய்யும் 'கைங்காரியத்தை' ஒன்றிரண்டு தமிழர் அமைப்புகளும் செய்து வருவதாக தமிழ் மக்கள் தெரிவிக்கின்றனர்.

கொழும்பில் வந்து தங்கி இருப்பதற்குப் போதிய காரணங்களும் உரிய ஆவணங்களும் வைத்திருந்த போதிலும் ஆளைப் பார்த்து ஆடையைப் பார்த்து உயரத்தைப் பார்த்து சந்தேகம் என்ற பெயரில் அழைத்துச் செல்லப்பட்டு அடைத்து வைக்கப்படுகின்றனர்.

தமிழர்கள் என்றரீதியில் வடக்கு, கிழக்கு, மலையகம், கொழும்பு உட்பட பலபகுதிகளைச் சேர்ந்தவர்களும் கைது செய்யப்படுகின்றனர். இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் பலர் நீண்ட நாட்களாக தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

அவசர கால சட்டத்தின் கீழ் இலங்கை வாழ் தமிழர்கள் யாவரும் பொலிசில் பதிவு செய்ய நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். வீதிச் சோதனைகளிலும், வீட்டுச் சோதனைகளின் போதும் அப்பதிவுகளை காட்டும்படி கட்டாயப்படுத்தப்படுகின்றனர். காட்டத் தவறுவோர் கைது செய்யப்படுகின்றனர். அவற்றை காட்டுவோரும் கூட கைது செய்யப்படுகின்றனர். வீதிச் சோதனைகளிலும், வீட்டுச் சோதனைகளிலும் பொலிஸ்பதிவுகளை காட்ட வேண்டிய கட்டாயமில்லை என்று பிரதிமாபொலிஸ் அதிபர் பத்திரிகைகளுக்கு தெரிவித்து வருகிறார். ஆனால் பதிவுகளை காட்ட வேண்டிய கட்டாயம் தொடர்கிறது.

பொலிஸ் பதிவை காட்ட வேண்டியது அவசியம் என்று உயர்நீதி மன்றம் தீர்ப்பளித்துள்ளது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. பொலிஸ் பதிவு இல்லாதபடியால் கைது செய்யப்பட்ட முஸ்லிம் சட்டத்தரணி ஒருவர் அவரது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டதாக வழக்கு தாக்கல் செய்திருந்தார். அவ்வழக்கில் நாட்டின் இன்றைய நிலைமையில் பொலிஸ் பதிவை கேட்பதும், சந்தேகத்தின் பேரில் கைது செய்வதும் அடிப்படை உரிமைகளை பாதிக்காது என்று உயர்நீதி மன்றம் தீர்ப்பளித்துள்ளது.

எனவே ஜனாதிபதியும், பிரதி பொலிஸ் மா அதிபரும் எவ்வளவுதான் வாக்குறுதிகளை கொடுத்தாலும் சந்தேகப் பதிவுகள் என்ற பே[illegible] தமிழர்கள் தொடர்ந்தும் துன்புறுத்தப்பட்டு வருகின்றனர்.

இவ்வாறு பாதுகாப்பு என்ற பேரில் தமிழர்கள் துன்புறுத்தப்படுவதற்கு எதிராக பல மட்டங்களிலும் குரல் எழுப்பப்படுகின்றன. துன்புறுத்தப்படுபவர்களுக்காக குரல் எழுப்புபவர்களும் பாதிக்கப்படலாம் என்ற அச்ச நிலைமையும் ஏற்பட்டுள்ளது.

''தமிழ் மக்களை விடுவிப்பதற்காகவே யுத்தமும் பாதுகாப்பு நடவடிக்கைகளும்'' மேற்கொள்வதாக அரசாங்கம் கூறுகிறது. இதுதான் விடுதலையா என்று தமிழ் மக்கள் கேட்கிறார்கள்?

ஆசிரியர் குழு

## மலையகத்தில் மனம் திறந்த கலந்துரையாடல் அவசியம்

வடக்கு கிழக்கு தமிழ்மக்கள் அவர்களுக்கென தனியான நிர்வாக அலகை கேட்கிறார்கள். முஸ்லிம் மக்களும் ஒரு நிர்வாக அலகை கேட்கிறார்கள். நாமும் எமது உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்ள நிர்வாக அலகை கேட்க வேண்டும் என்று இ.தொ.கா. தலைவரும், அமைச்சருமான எஸ். தொண்டமான் கூறியுள்ளார். கடந்தவாரம் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசும் போதே அவர் மேற்படி கூறியுள்ளார்.

இது இ.தொ.கா வின் நிலைப்பாடென்றால் வ்ரவேற்கத்தக்கதுதான். மலையக மக்களுக்கும் தனியான நிர்வாக அலகு வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைக்காவிட்டால் இனிமேலும் மலையக மக்கள் மத்தியில் நின்று பிடிக்க முடியாது என்ற அடிப்படையில் தொண்டமான் மேற்




படி கூறியிருக்க மாட்டார் என்று சந்தேகப்படாமலும் இருக்க முடியாது. ஏனெனில் ஐ.தே.கட்சியின் அரசாங்கத்தில் 17 வருடங்களாக அமைச்சராக இருந்த போது மலையக மக்களுக்கும் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைக்கவில்லை. இலங்கை இந்திய சமாதான ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் போதோ, மாகாணசபைகள் ஏற்படுத்தப்படும் போதோ அவர் மலையக மக்கள் பற்றி யோசிக்கவே இல்லை. மௌனமாகவே இருந்து விட்டார். அரசியல் ரீதியாக ஓரம்கட்டப்பட்ட நிலையில் இருந்து கொண்டுதான் மலையக மக்களுக்கும் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார்.

எனினும் அதிகாரப்பரவலாக்கல் சட்டமூலம் பற்றியும், புதிய அரசியலமைப்பு சீர்திருத்தம் பற்றியும் கலந்துரையாடல்களும் விவாதங்களும் நடைபெறும் போது தொண்டமான் மௌனம் கலைத்திருப்பது வரவேற்கத்தக்கது.

மலையக மக்கள் முன்னணி மலையக மக்களுக்கு தனிமாகாணசபை வேண்டுவன கோரிக்கை விடுத்திருந்தது. தொழிலாளர் தேசிய சங்கம், செங்கொடிச் சங்கம் என்பன மலையக மக்களை ஒரு தேசிய இனமாக அங்கீகரிக்க வேண்டுமென்று கூறிவருகின்ற போதும் அதிகாரப் பரவலாக்கலில் மலையமக்களுக்கு வழங்கப்பட வேண்டிய உத்தரவாதங்கள் பற்றி திட்டவட்டமாக எதனையும் கூறவில்லை.

இதைவிட ஐ.தே.கட்சிய முக்கிய தலைவர்களில் ஒருவரான மத்திய



மாகாணசபையின் தமிழ் கல்வி அமைச்சர் வீ.புத்திரசிகாமணி கூட மலையக மக்களை ஒரு தேசிய இனமாக அங்கீகரிக்க வேண்டும் என கூறிவருவதாக ஞாபகம்.

மலையகத்திலும் அரசியல் வேலைகளை முன்னெடுத்து வரும் புதிய ஜனநாயக கட்சி மலையகமக்களை ஒரு தேசிய இனமாக அங்கீகரிக்க வேண்டும் என்றும் அவர்களின் சுயநிர்ணய உரிமையை உறுதி செய்யும் அடிப்படையில் மலையகத்தில் பலமான சுயாட்சி உள்ளமைப் பொன்றையும், பல சுயாட்சி உப அமைப்புகளையும் ஏற்படுத்த வேண்டும் என்றும் வற்புறுத்தி வருகிறது.

எனவே மலையக மக்களுக்குச் சுயாட்சி வழங்க வேண்டும் அல்லது அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்ற கருத்துக்கள் தோன்றியிருப்பதை உணரமுடிகிறது. இந்த கருத்துக்கள் தனிப்பட ஒவ்வொரு கட்சியினதும் அரசியல் வேலைகளை முன்னெடுப்பதற்கான அதிகபட்ச கோரிக்கைகளாக மட்டும் வரையறுக்கப்பட்டு விடக்கூடாது. அவ்வாறு வரையறுக்கப்பட்டால், அவ்வாறு வரையறுக்கும் கட்சிகளினதும், அமைப்புகளினதும் பயணமும், வரையறுக்கப்பட்டதாகவே இருக்கும்.

மலையக மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட வேண்டிய அதிகாரங்களின் அளவு, தன்மை, முறைமை தொடர்பாக வித்தியாசங்களும் வேறுபாடுகளும் காணப்பட்ட போதும் மலையக மக்களுக்கு அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்பதில் பரவலாக ஒருமித்த கருத்தே இருக்கிறது.

அதிகாரங்கள் பகிர்ந்தளிக்க வேண்டும் என்பதில் மலையக தொழிற்சங்கங்கள், கட்சிகள் அமைப்புகளிடையே கருத்து ரீதியாக ஒருமைப்பாடு இருப்பது போன்று அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டிய விதம், தன்மை, அளவு முறைமை போன்றன தொடர்பாகவும் கருத்து ரீதியான ஆகக் குறைந்தளவான ஒருமைப்பாடுகளாவது ஏற்பட்டால்தான் மலையக மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்பதில் நிலவும் பல கருத்துக்களில் பொதுத்தன்மை ஏற்பட்டு பொதுக்கருத்தொன்று ஏற்படமுடியும்.

மலையக மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட வேண்டிய அதிகாரங்கள் தொடர்பாக மலையக அமைப்புகளிடையே ஒரு பொதுக்கருத்து ஏற்படாதவரை அதற்கான கோரிக்கையும், போராட்டமும் வலுப்பெற முடியாது.

மலையக மக்களின் நலன் என்ற அடிப்படையில் முன்வைக்கப்படும் கோரிக்கையும், போராட்டமும் வலுப் பெற வேண்டிய அவசியமாகும். அப்போதுதான் அவை வெற்றியின் திசையில் முன்னேற முடியும்.

எனவே மலையய மக்களின் மத்தியிலுள்ள தொழிற்சங்கங்கள், கட்சிகள், அமைப்புகள், வெகுஜன இயக்கங்கள் என்பன அவற்றிடையே நிலவும் வேறுபாடுகளை ஒதுக்கி வைத்துவிட்டு திறந்த மனத்துடன் கலந்துரையாடல்களிலும், விவாதங்களிலும் ஈடுபட வேண்டும்.

அந்த விவாதங்களையும், கலந்துரையாடல்களையும் ஆக்கபூர்வமாக நடத்தி அதிகாரப் பரவலாக்கலில் மலையக மக்களுக்கு உறுதி செய்யப்பட வேண்டியன பற்றி பொதுக்கருத்துக்கு வர வேண்டும்.

## ஒரு கடிதம்

கொட்டியாகலை,
பொகவந்தலாவ
24.07.97

அன்புள்ள கோவிந்தனுக்கு

நீ அனுப்பியிருந்த கடிதம் கிடைத்தது. வாசித்தறிந்தேன். உங்கள் தோட்டத்தில் நடக்கும், அநியாயங்களையும் கம்பெனி, அடக்குமுறைகளையும் பற்றி எழுதியிருந்தாய். பதுளை பகுதியில் மட்டுமல்ல. இங்கும் அதுதான் நிலைமை.

நீ கேள்விப்பட்டது உண்மைதான். இங்கு கடந்த ஐந்து வாரங்களாக ஸ்ரைக்' நடைபெறுகின்றது. வயது வந்த பிள்ளைகளுக்கு வேலை வழங்க வேண்டும். குறைந்தது 21 நாட்களாவது தோட்டத்தில் வேலை வழங்க வேண்டும் ஆகிய இரு கோரிக்கைகளை முன்வைத்து இந்த ஸ்ரைக்' நடைபெறுகின்றது. நிர்வாகம் ஒன்றும் 'மசியிறாப்புல'' தெரியவில்லை.

டிக்கோயா போடைஸ் தோட்டத்திலும் இந்த மாதிரி வேலை நிறுத்தம் இம்மாதம் நடைபெற்றது. தொழிற்சங்க வேறுபாடில்லாமல் அது

(தொடர்ச்சி பக்கம் 11 இல்)

நன்றி - நூலகத்திட்டம்



# யூலையின் துயர நினைவுகள்

கடந்த யூலை ஐந்தாம் திகதி திருகோணமலையில் பாராளுமன்ற உறுப்பினர் அ.தங்கத்துரையும் அவருடன் கூடவே நின்ற ஐவரும் படுகொலைக்கு உள்ளாக்கப்பட்டனர். அன்றைய தினம் புலிகள் இயக்கத்தின் கரும்புலிகள் தினமாகவும் இருந்தது. இப்படுகொலைகளை யார் செய்தார்கள் என்பது பற்றி இறுதி முடிவு செய்யப்படாத சூழலில் பற்பல ஊகங்களைப் பத்திரிகைகள் வெளியிட்டன. சில பத்திரிகைகள் கடந்த காலங்களில் விடுதலைப் புலிகள் வருடாவருடம் யூலை மாதத்தில் நடாத்தி வந்த தாக்குதல்களையும் படுகொலைகளையும் பட்டியலிட்டுக் காட்டின. அவற்றையிட்டு மேலும் ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கம் அல்ல. ஆனால் ஐக்கிய தேசியக் கட்சியின் பதினேழு வருட கால ஆட்சியில் நாட்டையும் மக்களையும் கொடூர அவலங்களுக்குள் இட்டுச் சென்ற மூன்று முக்கிய யூலைச் சம்பவங்களின் துயர் நினைவுகளை நினைவு கொள்வதே இதன் நோக்கமாகும்.

1977ம் ஆணடு யூலையில் இடம் பெற்ற பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி ஆறில் ஐந்து பெரும்பான்மையுடன் பதவிக்கு வந்தது. அரசாங்கம் அமைத்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனா ஒரு சில வாரங்களில் தமிழர்களுக்கு எதிரான இனவன் செயலைத் திட்டமிட்டு நடாத்தினார். அவ்வாறு சிங்கள மக்களின் கவனத்தை இனவாதத்தின் பக்கம் திருப்பி வைத்துக் கொண்டு ஜே.ஆர்.புதிய அரசியல் யாப்பினை நிறைவேற்றி தன்னைத் தானே நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக்கிக் கொண்டதுடன் எதேச்சதிகாரச் சட்டங்களையும் ஒன்றன் பின் ஒன்றாக நிறைவேற்றியும் கொண்டார். அந்த வகையில் நிறைவேற்றப்பட்டு இன்றுவரை அகோரத்தனம் புரிந்து நிற்கும் சட்டமே பயங்கரவாதத் தடைச்சட்டமாகும். மேலும் திறந்த பொருளாதாரக் கொள்கைக்கான சட்ட வரைவுகளும் வடிவங்களும் கொண்டுவரப்பட்டு பல்தேசியக் கம்பனிகளுக்கு செங்கம்பள வரவேற்பு நடாத்தப்பட்டது.

இதனைத் தொடர்ந்தே 1980 ஆம் ஆண்டு யூலை வேறுநிறுத்தம் என்பது மேற்கொள்ளப்பட்டது. அந்த வேலைநிறுத்தத்தின் முக்கிய கோரிக்கை முன்னூறு ருபா சம்பள உயர்வு என்பதாகும். வாழ்க்கைச் செலவின் அதிகரிப்பைத் தாங்க முடியாத அரசாங்க தனியார் துறைகளைச் சேர்ந்த சுமார் எண்பதினாயிரம் தொழிலாளர்கள் ஊழியர்கள் இவ்வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். ஏற்கனவே அதே ஆண்டு யூன் மாதத்தில் இடம் பெற்ற வேலை நிறுத்தத்தை குண்டர்கள் மூலம் தாக்கி அதனை முறியடித்ததுடன் சோமபாலா என்ற தொழிலாளியின் உயிரையும் குடித்துக் கொண்டது ஐக்கிய தேசிய கட்சி ஆட்சி. ஆனால் யூலை வேலை நிறுத்தத்தை அவ்வாறு முறியடிக்க முடியவில்லை. அந்த வேலை நிறுத்தத்தின் தலைவர்களைத் தாக்கி கைது செய்து சிறையில் அடைத்த போதிலும் வேலை நிறுத்தம் தொடரவே செய்தது. சிங்கள தமிழ் முஸ்லிம் என்ற இனவேறுபாடின்றி எண்பதினாயிரத்திற்கு மேற்பட்டவர்கள் கலந்து கொண்ட இவ்வேலைநிறுத்தத்தை முறியடிக்கவே அன்று அத்தியாவசிய சேவைகள் சட்டம் என்ற தொழிலாளி வர்க்க விரோதம் கொண்ட தொழிற்சங்க - ஜனநாயக மறுப்புச் சட்டம் கொண்டு வரப்பட்டது. அச்சட்டத்தின் கீழ் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்ட அனைவரும் வேலையில் இருந்து நீக்கப்பட்டனர். தொழிலாளர்கள் ஊழியர்கள் வீதிக்கு விரட்டப்பட்டனர். இலங்கையின் வரலாற்றில் இத்தகையதொரு கொடுமையான தொழிலாளர் விரோதச் சட்டம் கொண்டு வரப்பட்டமை இதுவே முதற்தடவை எனலாம். இச்சட்டம் நிறைவேற்றப்படுவதை இலங்கையிலேயே மிகப் பெரும் தொழிற்சங்கத்தை வைத்து அதற்கு தலைமை தாங்கி வந்த எஸ்.தொண்டமான் ஆதரித்து நின்றமை குறிப்பிடத்தக்கதோர் அம்சமாகும்.

இந்த யூலை வேலை நிறுத்தத்தின் மூலம் வேலையிழந்த பல்லாயிரக் கணக்கானவர்கள் வேலையின்றி பல வருடங்கள் தவிக்க வேண்டி ஏற்பட்டது. தமது உயர்ந்த பட்ச நடவடிக்கையான வேலைநிறுத்தம் செய்யும் உரிமை மறுக்கப்பட்டதன் எதிர் விளைவு அவர்களது அடிப்படை வாழ்க்கையை ஆட்டம் காணச் செய்தது. அவ்வாறு வேலை இழந்தவர்களில் இன்றும் பதினையாயிரம் பேர் வரை மீண்டும் வேலை வழங்கப்படாதவர்களாக 80 யூலை வேலைநிறுத்தக்காரர் என்ற பெயருடன் தொடர்ந்தும் தமது கோரிக்கையை முன்நிறுத்தி வருகின்றார்கள். அவர்களில் இதுவரை விரக்தியின் காரணமாக இருபது பேர்வரை தற்கொலை செய்து கொண்டுள்ளனர். இவ்வாறு இவ் 80 யூலை வேலைநிறுத்தம் பாரிய சமூகத் தாக்கத்தை ஏற்படுத்தியது மட்டுமன்றி இன்றுவரை அவை நீடித்துச் செல்கின்றன. இது அதிகாரத்தில் உள்ளவர்களுக்கு மறந்து போன விடயமாக இருக்கலாம். ஆனால் தொழிலாளி வர்க்கத்திற்கு வருடாவருடம் அன்றி நாளாந்தமே நினைவு கொள்ள வேண்டிய துயரச் சம்பவம் என்றே கூறுதல் வேண்டும். தொழிலாளி வர்க்கத்தின் வர்க்க உணர்வை வகைப்படுத்திக் கொள்ளவும் முதலாளித்துவ சொத்துடைய வர்க்கத்திற்கு எதிரான வர்க்க வன்மத்தை கூராக்கிக் கொள்ளவும் அது நினைவு கொள்ளப்பட வேண்டியதாகும்.



அடுத்த யூலை துயரச் சம்பவம் தான் 1983 கறுப்பு யூலை எனப்படும் அவப் பெயர் பெற்ற இனவன் செயலாகும். யூலை 23 ம் திகதி திருநெல்வேலியில் பதின்மூன்று இராணுவத்தினர் கண்ணி வெடி மூலம் கொல்லப்பட்ட சம்பவத்தைச் சாட்டாக வைத்து இலங்கை அதுவரை கண்டிராத கொடூர இன வன்செயல் தமிழர்களுக்கு எதிராக நாடு பூராவும் கட்டவிழ்த்து விடப்பட்டது. அரசாங்கத்தினாலும் ஆயுதப் படைகளாலும் திட்டமிட்டு முன்னெடுக்கப்பட்ட இவ் இனவன்செயல் சிறைச்சாலையில் வைக்கப்பட்டிருந்த ஐம்பத்திரண்டு தமிழர்களின் உயிரைக் கொடூரமாகக் குடித்து தனது உச்சநிலைக் காட்டுமிராண்டித்தனத்தை உலகுக்கு வெளிப்படுத்திக் காட்டியது. பலநூற்றுக் கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டு அநாதரவான நிலையில் வடக்கு நோக்கி கப்பலேற்றப்பட்டனர்.




இவ் இன வன்செயல் ஒட்டுமொத்தத்தில் தமிழர்கள் வாழ்வில் மிகப்பெரும் தாக்கத்தையும் எதிர்விளைவையும் தோற்றுவித்தது. தமிழ் இளைஞர்கள் தீவிரவாதப் பாதையில் வேகம் பெறத்தொடங்கினர். பல்வேறு இளைஞர் அமைப்புக்கள் உருவாக்கப்பட்டன. ஆயுதம் ஏந்திய இவ் அமைப்புகள் யாவும் இந்தியா நோக்கி நகர ஆரம்பித்தன. இந்தியாவும் அவர்களைத் தனது உள்நோக்கத்தின் தேவைகட்குப் பயன்படுத்த முன்வந்தது. இந்தியா தனது பிராந்திய மேலாதிக்கம் என்னும் தனது கைப்பிடிக்குள் இலங்கையைக் கொண்டு வருவதற்கு இவ் 83 ம் ஆண்டு யூலை

(தொடர்ச்சி பக்கம் 11 இல்)

### உதயன் நாளிதழ் கூறுகிறது:

## சமிக்ஞைகள் நல்லவை அல்ல!

அதிகாரப் பரவலாக்கல் திட்டம் குறித்து ஆராய்வதற்காகத் தமிழ்க் கட்சிகள் கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பில் கூடியிருந்தன. ஆயினும் தீர்க்கமான முடிவு எதுவும் எடுக்காமலே அந்த ஏழு கட்சிக் கூட்டம் கலைந்தது.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் செயற்பாட்டில் இரண்டு விடயங்கள் நிறைவு செய்யப்பட்டால் மட்டுமே அதனை மேற்கொண்டு முன்னெடுத்துச் செல்ல முடியும்.

தமிழ் மக்களுக்குத் தான் வழங்கப் போகும் உரிமைகள் எவை, எவை அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான தனது வழிமுறைகள் என்னென்ன என்ற விவரங்களை அரசு முன்வைக்க வேண்டும்.

அதேபோலத் தமிழ் மக்களுக்குச் சேர வேண்டிய உரிமைகள் எவை, அந்த உரிமைகளை அவர்கள் அனுபவிக்கத் தேவையான நிர்வாக மற்றும் கட்டமைப்பு எவ்வாறு அமைய வேண்டும் என்பதனைத் தமிழர் தரப்பு முன்வைக்க வேண்டும்.

இவையிரண்டும் அவரவர் கையில் இருந்தால் மட்டுமே அவற்றில் திருத்தங்கள், மாற்றங்கள், செப்பனிடுதல்கள் செய்து இரண்டுக்கும் சார்புடைய ஓர் இணக்கப் பாட்டுக்கு வருவதற்கு அரசும், தமிழ்க்கட்சிகளும் மேற்கொண்டு முயற்சிக்கலாம்.

ஆனால் துரதிர்ஷ்டவசமாக அரச தரப்பும் தான் வழங்கப்போவது என்ன என்று திட்டவட்டமாகச் சொல்லவில்லை- சொல்லக் கூடிய நிலையில் இன்னும் இல்லை. தமிழர் தரப்பும் என்ன வேண்டும் என்று சொல்லக் கூடிய நிலையில் இன்னும் இல்லை. முடிவு எதையும் முடிவு செய்ய முடியாமல் முரண்பட்டு நிற்கிறது.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா கூறியது போல, விடுதலைப் புலிகளின் பங்கில்லாமல் எந்தத் தீர்வையும் காணமுடியாது என்ற யதார்த்தம் ஒருபுறம்.

ஆனால் அதற்கு முன்னர் அரச தரப்பும் (சிங்களக் கட்சிகள் தரப்பும்) தமிழ்க்கட்சிகள் தரப்பும் தத்தமக்குள்ளேயே ஒரு முடிவுக்கு வரமுடியாமல் திக்குமுக்காடுவது நல்லசமிக்ஞைகள் அல்ல.

தமிழ் அரசியல் கட்சிகள் தமக்குள் ஒரு தீர்மானத்துக்கு வராமல் பிடுங்குப்படுவது தீர்வு யோசனைக்கு இறுதி வடிவம் காண்பதனைக் காலதாமதப் படுத்த அரசுக்கு ஒரு காரணமாகி விடும், நொண்டிக் குதிரைக்குச் சறுக்குவது நல்ல சாட்டல்லவா...!

தமிழ்க் கட்சிகள் தங்களுக்குள் இது விடயத்தில் ஒத்த கருத்துக்கு, தமிழ் மக்களின் இழந்த உரிமைகளை வென்றெடுக்கக் கூடிய ஏகோபித்த முடிவுக்கு வர இயலாமல் திண்டாடுவது, இழுபறிப்படுவது தீர்வு ஒன்று கிடைக்கும் என்ற அற்ப சொற்ப நம்பிக்கையையும் வேரோடு சாய்க்கிறதே!

தமிழர்களின் இன்றைய நிலைக்கு அவர்களின் மத்தியில் நிலவும் ஒற்றுமை இன்மையே காரணம் என்பது அரசியல் வரலாறு. அவர்கள் தமது உரிமைக் கோஷத்தை எக்காலத்திலும் ஒரே குரலில் ஒலிக்கமாட்டார்கள் என்பது நிரந்தர நியதியானால் தமிழ்ச் சாதிக்கு விடிவு ஏது?

01.07.1997

நன்றி - நூலகத்திட்டம்



## இங்கேருக்க இத கொஞ்சம் கேளுங்க...

தம்மைப் படித்தவர்கள் எனக் கூறிக் கொள்ளும் ஒரு கும்பலினால் மலையக மக்கள் ஏமாற்றப்பட்டுவிட்டனர். கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் அவர்கள் சமூகத்திற்கே துரோகம் செய்து விட்டனர். சமூகத்திற்கு பின்னடைவு ஏற்பட்டு விட்டது.

ஆளும் கட்சிக்கு எமது ஆதரவை தொடர்ந்தும் மூன்று ஆண்டுகளுக்கு வழங்கினால் எமது அடிப்படைப் பிரச்சினைகளுக்கு தீர்வை ஏற்படுத்திக் கொள்ளலாம்

*-தொண்டமான்*
*சூடாமணி 1997 ஜுலை 20*

மலையகத்தில் ஆங்காங்கு திட்டமிட்ட குடியேற்றங்கள் நடந்து வருவதை தடுத்தாக வேண்டும். இல்லையென்றால் எதிர்காலத்தில் எமது மக்கள் சின்னாபின்னப் பட்டுப் போவார்கள்.

*-பீ.சந்திரசேகரன்*
*சூடாமணி 1997 ஜுலை 20*

அரசியல் எதிரிகளைத் தீர்த்துக் கட்டும், துப்பாக்கிக் கலாச்சாரம் நிலவும் இலங்கையில் ஐம்பது ஆண்டுகளாக நாடாளுமன்றத்தில் அதில் இருபது ஆண்டுகள் தோட்டத் தொழில் அமைச்சராக இந்தியத் தமிழர் இருப்பது பெரும் சாதனைதானே.

*-இரா சிவலிங்கம்*
*(ஒரு காலத்தில் முற்போக்கு பேசியவர்)*
*ஜுனியர் விகடன் 1997.05.21*

இலங்கையில் அதிகம் படித்தவர்கள் யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு, தமிழர்கள் தான். அவர்கள் நிம்மதியாக வாழ முடியவில்லை. ஆனால் இந்திய வம்சாவளித் தமிழர்கள் பெரிய படிப்பாளிகள் அல்ல. என்றாலும் உழைப்பாளிகள் என்பதால் ஆளுங்கட்சியுடன் அனுசரித்துப் போய் எல்லா உரிமைகளோடும் வாழ்கின்றனர்

*-தொண்டமான்*
*ஜுனியர் விகடன் 97.05.21*

மாகாண சபையில் உறுப்பினர்களாக இருக்கின்ற போது மாகாண சபையின் அதிகாரங்களைப் பற்றி கூக்குரல் எழுப்பியவர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களாகிய உடன் மாகாண சபைகளைப் பற்றி வாய்திறப்பதேயில்லை.

*-லால் விஜேநாயக்க -*
*மத்திய மாகாணசபை எதிர்க்கட்சி*
*வீரகேசரி -97.07.11*

இலங்கை அரசியலை எடுத்துக் கொண்டால் 50 வருடங்களுக்கும் மேலாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அமைச்சர் தொண்டமான் தலைமையில் உறுதியாக நிற்கின்றது. எனவே இதனை மென்மேலும் வலுப்படுத்த தோட்டத்துறை தொழிற்சங்கங்களுக்கிடையே ஐக்கியம் வேண்டும்.''

*என்.விஜயசிங்கம்*
*இ.தொ.கா. ஆலோசகர் -*
*வீரகேசரி 97.07.09*

தோட்டத் தொழிலாளர்களின் வாக்குகளைக் கொள்ளையடிப்பதில் பலர் அக்கறை காட்டுகின்றனர். ஆனால் அவர்களது வாக்குரிமையை வாக்காளர் இடாப்பில் பதிவதில் எவரும் அக்கறை காட்டுவதில்லை. கிராம சேவகர்கள் ஒருபக்கச் சார்பானதால் வாக்காளரின் வாக்குகள் பதியப்படுவதில்லை. சில வாக்குச் சாவடிகளுக்கு அருகில் பவுசர் கணக்கில் கசிப்பு கொடுத்து தோட்டத் தொழிலாளர்களின் வாக்குகளை ஏமாற்றி கொள்ளையடித்துள்ளனர்.

*-எஸ்.விமலவன்*
*ம.மா.ம.உறுப்பினர் -*
*வீரகேசரி 97.07.02*

தலைவருக்குக் கிடைத்துள்ள புதிய அமைச்சின் மூலம் இந்திய வம்சாவளி மக்களின் பொதுவசதிகள் மேம்பாட்டுக்கான நடவடிக்கைகளை எடுக்க முடியுமென நம்புகிறோம்''

*ஆர்.யோகராஜன்*
*தினகரன் 97.07.22*

''இலங்கையின் ஏனைய மக்களுக்கு இருக்கும் சகல உரிமைகளும் தோட்டப்புற மக்களுக்கும் வழங்கப்படுகின்றன.

*பேராசிரியர் பீரிஸ்*
*தினகரன் -97.07.16*

வடக்கில் தமிழீழம் கேட்கப்படுகின்றது. முஸ்லீம்கள் தனி அதிகார அலகு கேட்கின்றனர். நமக்கும் சுயநிர்ணய அலகாக ஒரு அரசியலமைப்பை அமைக்கவே நான் அங்கலாய்க்கிறேன். ஆனால் இ.தொ.கா. தோட்டக் கமிட்டி தலைவர்கள் பிரதிநிதிகள், நிர்வாகிகள் என்னைக் காலைவாரி விடுகின்றார்கள். காசுக்கும் சாராயத்திற்கும் மலையகத்தைக் காட்டிக் கொடுக்கின்றார்கள்.

*-தொண்டமான்*
*தினகரன் 97.07.09*

தோட்டங்களில் வேலைவாய்ப்பு வழங்குவதற்காக இளைஞர்களைப் பதிவு செய்வதில்லை. இதனால் தலைநகருக்கு வரவேண்டிய நிர்ப்பந்தம் அவர்களுக்கு ஏற்படுகின்றது. அங்கும் கைது, சோதனை, இம்சைகளுக்கு ஆளாக வேண்டியேற்படுவதினால் அவர்கள் மீண்டும் பெற்றோரிடம் திரும்பிச் சென்று விரக்தியுடன் வாழ வேண்டியுள்ளது.

*பி.சந்திரசேகரன்*
*தினக்குரல் 97.07.15*

## அமைதியான இரவொன்றில்...

வீல் வீல் வீல் வீல்
அயலில் ஒரு குழந்தை அழுகிறது
வீல் வீல் வீல் வீல்
வெளியே நாயொன்று ஊளையிடுகிறது
வீல் வீல் வீல் வீல்
தூரத்தே வண்டுகள் கீச்சிடுகின்றன

கண் காணாத தொலைவில்
போரொன்று தொடர்கிறது
செவிக்கெட்டாத தொலைவில்
வேட்டுக்கள் அதிர்கின்றன
மனிதர் மேனி நடுங்குகின்றனர்
மனிதர் ஓடிச் சிதறுகின்றனர்
மனிதர் வீழ்ந்து மரிக்கின்றனர்
உண்ண உணவும்
உறங்க நீரும் வழங்கிய மண்
மறுபடியும் குருதியை அருந்துகிறது

மாநகரின் அமைதியான இரவொன்றில்
வானொலியின் செய்தி அறிக்கை
மெல்ல ஒலிக்கிறது
''பயங்கரவாதிகளின் தாக்குதல்
முற்றாக முறியடிக்கப்பட்டு விட்டது.
அரச தரப்பில் சேதங்கள் இல்லை
உயிரிழப்பும் இல்லை''

வீல் வீல் வீல் வீல்
அம்புலன்சுகள் கூவுகின்றன
இரவின் வீதிகளில் மோனம் சூழமுன்
போரின் உண்மைகளைச் சுமந்தபடி
அம்புலன்சுகள் விரைகின்றன.

**ஸ்வப்னா**
**யூன்'97**

## ஒரு மலையக மாணவனின் டயறி

**எஸ்.உதயசூரியன்**

**30.06.97- 04.07.97**

திங்கள் காலை கூட்டத்தில் தற்போதுள்ள அதிபர் மாற்றம் பெற்றுச் செல்கின்றார் என்பது அறிவிக்கப்பட்டது. சிவலிங்கம் அவரைப் பாராட்டி ஆஹா, ஓகோ என்று பேசினார். ''இந்த மனுசன் போய் தொலைஞ்ச பிறகாவது நல்லா பாடம் நடக்குமோ தெரியாது'' என்று அகிலன் கூறினான். மாணவர் சார்பாக பெரிய வகுப்பு அண்ணன் சுரேஸ் யாரோ சேர் எழுதிக் கொடுத்த கட்டுரையை பேச்சு போல் வாசித்தார். யாரும் கவனிக்கவில்லை. இப்பேச்சுக்கு சிவலிங்கம் சேரும், நந்தகுமார் சேரும் மட்டும் கைதட்டினார்கள். காலைக் கூட்டத்தைத் தொடர்ந்து ஆசிரியர் கூட்டம் நடைபெறவிருப்பதால் எல்லோரும் சண்டை பிடிக்காமல் சத்தம் போடாமல் விளையாடும்படி சிவலிங்கம் சேர் கூறினார். எல்லோரும் ''சத்தம் போட்டுக் கொண்டு ஓடினார்கள். எல்லோரும் விளையாட மைதானம் போதாது என்பதால் பலர் தேயிலைக்குள் சென்று ஓடிப் பிடித்து விளையாடினார்கள். நானும் இராஜலிங்கமும் கற்களை வைத்து ஆடு புலி ஆட்டம் விளையாடினோம்.

பத்து மணியளவில் ஆசிரியர் கூட்டத்தில் பலத்த சத்தம் கேட்டது. கண்ணாடி ஓட்டைக்குள்ளால் எட்டிப் பார்த்தோம். கணக்கு சேர் சத்தம் போட்டு பேசிக் கொண்டிருந்தார். மற்றையவர்கள் அப்பேச்சைக் கேட்காமல் சத்தம் போட்டுக் கொண்டிருந்தனர். இனி எந்தத் திருட்டுப் பயலும் இந்த பாடசாலைக்கு அதிபராக வர நினைக்கக் கூடாது' என்று அவர் சத்தமாக கூறுவது கேட்டது.

இங்கு எல்லாருமே திருடன் தான். எஸ்.டீ.எஸ் பணம், வசதிக்கட்டணம் திருடியவன் இங்கு அதிபரா வர நினைக்கக் கூடாது என்று சத்தம் போட்டு சுப்பிரமணி சேர் பேசினார். ஆசிரியர்கள் எல்லோரும் பலமாக சத்தம் போட்டதால, தொண்டமான் மண்டபத்திற்கு முன் மாணவர்கள் எல்லோரும் கூடிவிட்டனர்' இங்கு ஒரு பிரச்சினையுமில்ல எல்லோரும் வீட்டுக்குப் போங்க'' என்று செல்வராஜா சேர் கூறினார். பாடசாலை கீதம் பாடனுமா சேர் என்று சீனியர் பிரிபக்ட் வசந்தகுமார் கேட்டார். ''ஒரு.... வேண்டாம் வாய் மூடிக்கிட்டு வீடு போய் சேருங்க என்று அவர் கூற பிள்ளைகள் வாயடைத்துப் போய் விட்டார்கள்.

செவ்வாய், புதன் கிழமைகளிலும் ஆசிரியர் கூட்டம் நடைபெற்றது. உங்கள் முன்னேற்றம் பற்றிதான் பேசுகின்றோம். தூர போய் விளையாடுங்கள் என்று கூறினார்கள். நானும் சுதர்சனும் வாசுதேவனும் தேயிலைக்குள் ஒழிந்து விளையாடினோம். புதன் எனது பென்சில் காணாமல் போய்விட்டது.

வியாழன் வந்தாறுமுல்லையிலிருந்து மாமா வந்திருந்தார். அங்கும் கிறிஸ்டியன், இந்து என பாடசாலையில் பெரிய சண்டை நடப்பதாக கூறினார். இராகலை பகுதி பாடசாலையொன்றிலும் சாதிப் பிரச்சினை, சங்கப்பிரச்சினை இருப்பதாக கூறினார். வியாழன் வெள்ளி பாடசாலை போகவில்லை.

**7.7.97 - 11.7.97**

திங்கள் பாடசாலை சென்ற போது பாடசாலை சுவர்களில் பல விடயங்கள் தாரால் எழுதப்பட்டிருந்தது. கணக்கு சேரை அதிபராக்குவோம் என சில இடங்களிலும் சுப்பிரமணி சேரை அதிபராக்குவோம் என சில இடங்களிலும் எழுதப்பட்டிருந்தது. விளம்பரம் ஒட்டக்கூடாது என எழுதப்பட்டிருந்த வாசகத்தின் மீதும் திருடனை அதிபராக்காதீர்கள் என எழுதப்பட்டிருந்தது. திங்கள், செவ்வாய் பாடமொன்றும் நடக்கவில்லை. புதன் பெரிய வகுப்பு அண்ணன் சிவராஜ் வகுப்புக்கு வந்து கணக்கு சேரை அதிபராக்குவோம். உங்கள் பெற்றோருக்கும் கூறுங்கள் என்றார். சுப்பிரமணி சேரை திருடன் என்றும், ஒழுங்காக படித்துக் கொடுப்பதில்லை என்றும், பெண்கள் விவகாரத்தில் மோசம் என்றும் கூறினார். எல்லோரும் தமிழ்ப் புத்தகத்தை எடுத்து வாசியுங்கள் என்றும் கூறினார். பிள்ளைகள் சத்தம் போட்டுக் கொண்டிருந்தார்கள். வியாழன் வெள்ளி வாசிப்பு பாடம் இடம் பெற்றது.

**14.07.97 - 17.7.97**

திங்கள் பாடசாலை சென்ற போது மேலும் பல போஸ்டர்கள் ஒட்டப்பட்டிருந்தன. சுப்பிரமணி சேர், கணக்கு சேரைப் பற்றி வெவ்வேறு இடங்களில் மோசமாக எழுதப்பட்டிருந்தது. செவ்வாய் காலை இராஜதுரை அண்ணன் வகுப்புக்கு வந்து, சுப்பிரமணி சேரை அதிபராக்குவோம் அவர்தான் நல்லவர். நீங்கள் எல்லாம் அவருக்குத் தான் சப்போட் பண்ண வேணும் என்றார். கணக்கு சேர் முன்னிருந்த பாடசாலையிலிருந்து அடிச்சு விரட்டப்பட்டவர். பாடசாலையிலுள்ள பொருட்களை எல்லாம் தனது வீட்டுக்கு கொண்டு போய் வைத்துள்ளார் என்றும் கூறினார். அவரது சாதியும் சரியில்லை என்றார். சாதி பேசக்கூடாது தானே அண்ணே என்று நான் எழுந்து கேட்டேன். பேசக்கூடாது தான் உங்களுக்கும் விசயத்த சொல்லி வைக்கணும் தானே என்று கூறினார்.

புதன் கணக்கு சேரை அதிபராக்குவோம் என கோரி ஸ்ரைக் நடைபெற்றது. புதன் காலையிலிருந்து மைதானத்தில் உட்கார்ந்து இருந்தமையால் தலைவலி வியாழன் பாடசாலை போகவில்லை.

**21.07.97 - 25.07.97**

திங்கள், சுப்பிரமணி சேரை அதிபராக்குவோம் என்று கோரி ஸ்ரைக் நடைபெற்றது. சேர்மார்கள் இரண்டு குழுவாக நின்று கொண்டிருந்தார்கள். மாணவர்கள் கோசம் போடத் தொடங்கினார்கள். திருடனை அதிபராக்க விடக் கூடாது என சத்தம் போட்ட போது, வேறு உயர்வகுப்பு அண்ணன்மார்கள் வந்து கல்லெறியத் தொடங்கினார்கள். எனக்கு முழங்காலில் காயம்பட்டது. அங்கிருந்து நேராக வீடு சென்றேன். பெரிய வகுப்பு அண்ணன்மார்களும் இரு பிரிவாக இருக்கின்றார்கள் என இரவிச்சந்திரன் அண்ணன் கூறினார்.

செவ்வாய் கிழமை பாடசாலையில் பொலிஸ்காரர்கள் நின்றார்கள். வெள்ளிக்கிழமை வரை பாடசாலை மூடப்படுவதாக கூறினார்கள்.

**28.. 7.97 - 01.08.97**

ஞாயிறு பெரிய அண்ணன்மார்கள் அடித்துக் கொண்டதால் முரளி அண்ணனுக்கு படுகாயம் ஏற்பட்டு ஆசுபத்திரியில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் 15 பேருக்கு நல்ல காயம் என்றும் கூறினார்கள். இந்த அதிபர் சண்டையில் தொழிற்சங்கப் பின்னணி இருப்பதாக லட்சுமணன் மாமா கூறினார். தோட்டத்திலும் இந்த சண்டை வர இருந்ததாகவும், கார்மேகம் அண்ணன் தலையிட்டு, இந்தப் பிரச்சினையை நன்கு விளங்கப்படுத்தியதால் மாணவர் சண்டையோடு முடிந்து விட்டது என்று அவர் விளக்கமாக கூறினார். அதிபர் பதவிக்கு இருவருக்குமே தகுதி போதாது என்று பல்கலைக்கழகத்தில் படிக்கும் அண்ணன் கூறினார்.

அதிபருக்குரிய தகுதி, பூரணமாக இருந்தும், தொழிற்சங்க 'வெட்டு' காரணமாக எதுவித பதவியும் கிடைக்காமல், சாதாரண ஆசிரியராகவே இருக்கும் ஆறுமுக சாமி என்ற அட்டன் பகுதி சேர் ஒருவரை அதிபராக்க வேண்டும் என மாரியம்மன் கோவிலில் நடந்த கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டி

(தொடர்ச்சி பக்கம் 11 இல்)

நன்றி - நூலகத்திட்டம்



# இராணுவ மேலாதிக்கம் வலுப்பெறும் இலங்கை

'போர் என்றால் போர் சமாதானம் என்றால் சமாதானம்' இது வெண்ணிற சிவில் உடையணிந்த இராணுவவாதியான ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் . கூற்றாகும். இதனை ஜே.ஆர். 1977ம் ஆண்டு பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த அ.அமிர்தலிங்கத்திற்கு ஊடாகத் தமிழ் மக்களுக்கு எதிராக விடுக்கப்பட்ட ஒரு எச்சரிக்கை என்றே பொதுவாகக் கொள்ளப்பட்டது. ஆனால் சாராம்சத்தில் தமிழ் முஸ்லீம் மக்களுக்கு மட்டுமன்றி இந்நாட்டின் தொழிலாளி வர்க்கத்திற்கும் உழைக்கும் அனைத்து வெகுஜனங்களுக்கும் விடுக்கப்பட்ட ஒரு ராணுவ எச்சரிக்கை என்பதே உண்மையாகும். இலங்கையின் அரசியல் வரலாற்றில் ஜே.ஆர்.போன்றதொரு உயர் வர்க்க வன்மம் படைத்த பேரினவாதப் பிற்போக்குவாதியை

தேசிய உணர்வூட்டப்பட்டதுடன் சாதாரண கிராமப்புற வேலையற்ற சிங்கள இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புச் சந்தர்ப்பமும் காட்டப்பட்டது. போதிய சம்பளமும் இன்னும் பிற சலுகைகளும் வழங்கப்பட்டன. சம்பளம், மேலதிக கொடுப்பனவு, ஒய்வூதியம், நஷ்ட ஈடு சம்பள உயர்வுகள் எனக் காட்டப்பட்டதனால் இறந்தாலும் பரவாயில்லை ஏதோ குடும்பத்திற்காவது கிடைக்கட்டும் என்ற நிலையில் ராணுவத்தை நோக்கிச் செல்ல சிங்கள இளைஞர்களும் யுவதிகளும் நிர்ப்பந்திக்கப்பட்டனர். இவ்வாறு சாதாரண குடும்பங்களில் இருந்து பெருமளவு சிங்கள இளைஞர்கள் ராணுவத்தின் அடிநிலைத் தரங்களுக்கு எட்டாம் வகுப்பு கல்வித்தரத்துடன் சேர்க்கப்பட்டனர். அதேவேளை நடுத்தர உயர்வர்க்கங்களில் கூடிய கல்

பிரயோகிக்கும் அளவுக்கு உள்ளூர வளர்ச்சி கண்டது. ஒருபுறத்தில் தமிழ்த் தீவிரவாதத்திற்கு எதிராகவும் மறுபுறத்தில் தெற்கின் ஜே.வி.பி கிளர்ச்சியை ஒடுக்கவும் தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும் சகல சந்தர்ப்பங்களிலும் ராணுவம் தீர்மானிக்கும் சக்தியாகிக் கொண்டது. அத்தகைய வளர்ச்சிப் போக்கு அண்மைக் காலங்களில் அதிகரித்த முக்கியத்துவத்தை அடைந்தும் வருகின்றமை ஒரு முக்கிய பண்பும் பரிமாணமாகவும் விளங்குகின்றது.

1994 ல் பொதுசன ஐக்கிய முன்னணி சமாதான முழக்கத்துடன் யுத்தத்தை நிறுத்துவதாகவும் கூறி பதவிக்கு வந்த போது அரசியலில் ராணுவம் வகித்து வந்த செல்வாக்கு படி இறங்கி கீழ் நிலைக்குச் செல்லும் என்றே பொதுவாக எதிர்பார்க்கப்பட்டது. ஆனால்

மேயாகும்.

உதாரணத்திற்கு பாகிஸ்தான், தாய்லாந்து, இந்தோனிசியா, பர்மா போன்ற நாடுகளைக் காணமுடியும். அந்த நாடுகளில் ராணுவ சர்வாதிகாரமே அப்பட்டமாக நிலவி வருகின்றன. குறிப்பாக பாகிஸ்தானின் நிலைமை கவனத்திற்குரியதாகும். அங்கு ஜனநாயகம் மீட்கப்பட்டு தேர்தல்கள் இடம் பெற்றிருப்பினும் கூட திரைக்குப் பின்னால் ராணுவமே சகலதையும் தீர்மானிக்கும் சக்தியாக இருந்து வருகின்றது. அங்குள்ள ராணுவத் தலைவர்களுக்கும் தளபதிகளுக்கும் ஆழமான வர்க்க தேவைகள் உண்டு. அவர்களிடம் நிறைய நிலங்களும், தொழிற்சாலைகளும் காணப்படுகின்றன. நிலச் சீர்திருத்தத்தைக் கொண்டுவந்த முன்னாள் பிரதமர் பூட்டோவை சிறையிடவும்

காரணம் எனக் கூறப்படுவதில் உண்மை இருக்கவே செய்கிறது. ' யங்கரவாதத்திற்கு ராணுவத்



இன்றுவரை காணவியலாது. அத்தகைய நபர் தனது ஆட்சி அதிகார காலத்திலேயே இலங்கையின் ஆயுதப்படைகளை சக்திமிக்கதாக உருமாற்றி நிலைப்படுத்திக் கொள்வதில் முன்னுரிமை கொடுத்து வந்தவர். அதற்காக தனது ஒரே ஒரு வாரிசான மகனையும் ஆயுதப்படைக்கு வழங்கினார். அவரது தலைமையில் பயிற்சியளிக்கப்பட்டு உருவாக்கப்பட்டதே எஸ்.ரி.எவ் எனப்படும் விஷேட அதிரடிப்படையாகும். ஜே.ஆரின் உள்ளார்ந்த விருப்பத்தின்படி ஐக்கிய தேசியக் கட்சியின் பதினேழு வருடகால ஆட்சியில் இராணுவ பலம் படிப்படியாகக் கட்டி எழுப்பப்பட்டது.

இவ்வாறு இலங்கையின் இராணுவம் வெறுமனே ஆட்பலத்தைக் கூட்டியும் ஆயுத தளபாடங்களைப் பெருக்கியும் கொள்வதால் மட்டும் அதன் தரம் உயரமுடியாது என்பது உணரப்பட்டது. அதன் நடைமுறைப் பயிற்சிக்கும் வளர்ச்சிக்கும் ஒரு தகுந்த களம் தேவைப்பட்டது. அதனை 77 ம், 79 ம், 81 ம், 83 ம் ஆகிய நான்கு திட்டமிட்ட இனவன்செயல்கள் மூலம் பரந்த ஒரு தளமாகவும் களமாகவும் ஜே.ஆர். தோற்றுவித்தார்.

இதன்மூலம் தமிழ் மக்கள் குறிப்பாக அவர்கள் மத்தியில் உள்ள இளைஞர்கள் தீவிரவாதப் போராட்டம் ஒன்றில் ஈடுபடுமாறு நிர்ப்பந்திக்கப்பட்டனர். அகிம்சைப் பாதையிலும் அறவழியிலும் நின்று உரிமை கேட்டு வந்த தமிழ் மக்கள் மீண்டும் மீண்டும் அரச பயங்கரவாதத்தால் கொன்றொழிக்கப்பட்ட சூழலில் அவர்களுக்கு முன்னால் எஞ்சியிருந்த ஒரே ஒருவழி தீவிரவாதப் பாதையில் ஆயுதம் ஏந்துவதாகவே காணப்பட்டது.

மேற்கூறிய சூழலில் ஜே.ஆருக்கும் ஆளும் வர்க்கத்திற்கும் மேலும் ராணுவத்தைப் பலப்படுத்திக் கொள்வதற்கு வாய்ப்பும் வசதியும் கிடைத்தது. 'தமிழ் பயங்கரவாதத்திற்கு' எதிராக ஆயுதப்படைகளை முடுக்கி விட்டு இனத்தையும் மதத்தையும் மொழியையும் நாட்டையும் பாதுகாப்பதற்கு சிங்கள மக்களை ஆதரவு வழங்குமாறு அறைகூவல் விடுக்கப்பட்டது. ராணுவ ஆட்பலத்தைப் பெருக்கிக் கொள்ள சிங்கள



வித்தரத்துடன் அதிகாரிகளாக குறிப்பிட்ட தொகையினர் தேர்ந்தெடுத்துக் கொள்ளப்பட்டனர். ஒரு ஆளும் வர்க்கத்தின் ராணுவத்தலைமைக்கு இருக்க வேண்டிய வர்க்க நோக்குப் பண்புக்கு ஏற்றவாறே உயர் அதிகாரிகள் ஆயுதப்படைகளின் சகல தலைமைப் பதவிகளிலும் இருந்து வருவதை அவதானித்துக் கொள்ள முடியும்.

1970ம் ஆண்டிற்கு முன்பு எண்ணிக்கையிலும் தரத்திலும் ஆயுத தளபாட வசதிகளிலும் மிகத் தாழ்ந்த நிலையில் இருந்து வந்த இலங்கையின் ஆயுதப்படைகள் 1971 ம் ஆண்டு ஏப்பிரல் கிளர்ச்சிக்கு முகம் கொடுத்த போது தான் அதன் பலவீனமும் இயலாமையும் நடைமுறையில் கணக்கிடப்பட்டது. அன்று முதல் அதன் நோக்கும் போக்கும் மாறுதல்களுக்கு உள்ளாக்கப்படுவதன் அவசியம் ஆளும் வர்க்க மட்டத்திலும் ராணுவ மட்டத்திலும் உணரப்பட்டது. உள்ளார்ந்த முயற்சிகள் செய்யப்பட்டன. அத்தகைய முயற்சிகளை முழுமைப் படுத்தி முன்னெடுக்கும் கைங்காரியத்தையே ஜே.ஆர். கச்சிதமாகச் செய்து கொண்டார். ராணுவ விஸ்தரிப்புக்கு உதவியாகக் காலம் சென்ற ரஞ்சன் விஜேயரட்ணா, அத்துலக்முதலி போன்றோரை தனது பாதுகாப்பு அமைச்சராக்கி ராணுவப் பலப்படுத்தலில் ஈடுபட்டார்.

இவ்வாறு சக்திப்படுத்தப்பட்டு வந்த ராணுவம் படிப்படியாக அரசியலில் தனது செல்வாக்கைப்

இந்த அரசாங்கத்தின் ஆரம்ப நாட்களில் இடம்பெற்ற சமாதான முயற்சிகளையும் விட்டுக் கொடுக்கும் முயற்சிகளையும் ராணுவம் எதிர்க்க ஆரம்பித்தது. ஏதாவது ஒருவழியில் சமாதான முயற்சிகள் முறிவடைவதையும் யுத்தம் தொடங்கப்படுவதையும் நோக்கியே ராணுவம் செயல்பட்டது. அதற்கு ஒத்துழைப்பது போல் இந்த அரசாங்கத்திற்கு ராணுவத் தொழிலில் ஈடுபட்டவரான ஒரு பாதுகாப்பு அமைச்சரும் கிடைத்தார். இதன்மூலம் ராணுவம் சகலவழிகளாலும் சக்திப்படுத்தப்படுவது மட்டுமன்றி அதன் மேலாதிக்க நிலையும் படிப்படியாக வளர்ச்சி பெற்று வருகின்றது. இத்தகைய ராணுவ மேலாதிக்கம் மேலும் வளர்ந்து செல்லுமாயின் அதன் விளைவு இன்று பெயரளவிலான தாக்கக் காணப்படும். முதலாளித்துவ ஜனநாயகமும் அதன் ஆட்சி நிறுவனங்களும் கேள்விகளுக்கு ஆளாக்கப்படும் அபாய நிலை ஒன்று கூடத் தோன்றலாம். இதுபற்றி இன்று தமிழ் மக்களுக்கு எதிராக இராணுவத்தை ஏவிக் கொண்டிருக்கும் பேரினவாதிகளோ அல்லது ஆளும் வர்க்க அதிகார சக்திகளோ எவ்வகையிலும் கவலை கொள்ள மாட்டார்கள். ஏனெனில் ராணுவ மேலாதிக்கம் வலிமை பெற்று அதுவே சகலதையும் தீர்மானிக்கும் சக்தியாக மாற்றம் பெறும் போது அதனால் கடுமையாகப் பாதிக்கப்படுவது இந்நாட்டின் தொழிலாளி வர்க்கமும் உழைக்கும் வெகுஜனங்களும் தேசிய இனங்களு

தூக்கிலிடவும் தயங்காத வர்க்க வன்மம் கொண்ட இராணுவத் தலைமையே அங்கு இருந்தது. இன்றும் அதுவே உயர் வர்க்க நலன் காக்கும் மேலாதிக்க சக்தியாக பாகிஸ்தானில் இருந்து வருகின்றது.

இத்தகைய ஒருநிலை இலங்கையில் தோன்றாது என்பதற்கு எவ்வித உத்தரவாதமும் இல்லை. இலங்கை ராணுவத்தின் தலைமைத் தளபதிகளும் உயர் அதிகாரிகளும் சொத்துடைய பெரும் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் தான். ஆனால் பாகிஸ்தான் இராணுவத் தளபதிகள் போன்ற அதி உயர் சொத்து வர்க்க நிலையில் இங்கு இல்லை என்பது ஒருபுற உண்மையாக இருக்கும். அதேவேளை இவ்வாறான நிலைக்கு வளர சகல சந்தர்ப்பங்களும் இலங்கை இராணுவத் தலைமைக்கு உண்டு என்பது மறுபுற உண்மையாகவும் உள்ளது. ஏற்கனவே தளபதிகளாகப் பதவி வகித்த சிலர் முறையற்ற வழிகளில் சேர்த்துக் கொண்ட பணவிபரங்களும் அதற்குரிய ஊழல்களும் அம்பலத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளன. அவர்களுக்கு எதிரான நீதிமன்ற வழக்குகளும் இருந்து வருகின்றன. இதன் கார்ரணமாகவே பொதுசன ஐக்கிய முன்னணி பதவிக்கு வருவதைத் தடுப்பதற்கான ஒரு சதி முயற்சியில் இராணுவ உயர் அதிகாரிகள் சிலர் சம்மந்தப்பட்டிருக்கவும் செய்தனர். ஏற்கனவே 1962ம் ஆண்டிலும் அத்தகையதொரு இராணுவச் சதி முயற்சி ஒன்று முன்னெடுக்கப்பட்டு தோல்வியடைந்தமை குறிப்பிடக் கூடியதாகும்.

இன்றைய சூழல் ராணுவம் அரசியலில் மேலாதிக்கம் செலுத்தி அரசியல் தீர்மானங்களைத் தீர்மானிக்கும் ஒரு தீர்க்கமான சக்தியாக வளர்ந்துள்ளமையை அரசியல் ராணுவ ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். பொதுசன ஐக்கிய முன்னணியும் திருமதி சந்திரிகாவும் பதவிக்கு வந்த வேளையில் கொண்டிருந்த இனப் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வு காண்பது என்பதனைப் படிப்படியாகக் கைவிட்டு ராணுவத் தீர்வின் மூலம் சமாதானம் என்ற நிலைப்பாடு எடுக்கப்படுவதற்கு ராணுவ மேலாதிக்கமும் நெருக்குதலுமே

தீர்வும் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வும்' என்ற கண்டுபிடிப்பு சாராம்சத்தில் ஜே.ஆரின் அன்றைய 'போர் என்றால் போர் சமாதானம் என்றால் சமாதானம்' என்ற ராணுவ நோக்கிலான கோட்பாட்டின் மறுவடிவமேயாகும்.

ஆதலால் தமிழ்ப் பயங்கரவாதம் பிரிவினை போன்றவற்றை எதிர்ப்பதற்கெனக் கூறிக் கொண்டு ராணுவத்தை ஆட்பலத்திலும், ஆயுத தளபாட நிலையிலும், நவீன தொழில் நுட்ப ரீதியிலும் சக்திமிக்கதாக்குவது என்பது தனியே இனப் பிரச்சினையை மட்டும் எதிர்கொள்வதற்கல்ல. எதிர்காலத்தில் சிங்கள மக்கள் மத்தியில் வெடித்துக் கிளம்பும் எந்தவொரு வெகுஜனக் எழுச்சியையும் அடக்கி ஒடுக்கும் பலம் வாய்ந்த ராணுவமாகவும் திகழச் செய்யும் அடிப்படை நோக்கத்தையும் கொண்டுள்ளதேயாகும். இதனை 1971 ம் 88 ம், 89 ம் ஆண்டுகளின் போது தென் இலங்கையில் காண முடிந்தது. அதன் விளைவானதே தென்னிலங்கையில் அறுபதினாயிரம் பேர் அழிக்கப்பட்டதுடன் மேலும் பல ஆயிரம் இளைஞர்கள் காணாமல் போயினர்.

இவ்வாறு ராணுவ மேலாதிக்கம் வலுப்பெற்று வரும் அதேவேளை அதன் எதிர்நிலை சக்தியான ஒடுக்கப்படும் சகல மக்களும் தம்மிடையேயான ஐக்கியத்தை கட்டியெடுப்பது அவசியமாகும். ஒடுக்கப்படும் சிங்கள மக்களும் மற்றும் தேசிய இனங்களும் ஒடுக்குமுறைகளுக்கு எதிராக ஜனநாயகத்தையும் சுயநிர்ணய உரிமையையும் மையப்படுத்தி ஐக்கியப்படுவதும் அதன் வழியில் முன்செல்வதும் இன்றைய தேவையாகும். அத்தகைய ஐக்கியத்தினாலேயே வளர்ந்து வரும் ராணுவ மேலாதிக்கத்தை தடுத்து நிறுத்த முடியும். உடனடியாகக் குறைந்தளவிலான ஜனநாயகத்தையும் நீண்ட காலத்தில் முழுமையானதுமான ஜனநாயகம் சுயநிர்ணய உரிமை என்பவற்றையும் வென்றெடுக்கக் கூடியதாக இருக்கும்.

**நமது அரசியல் நிருபர்**

நன்றி - நூலகத்திட்டம்



# மாக்ஸியத்தை மறுக்கும் ஒரு முயற்சி!

**IDEOLOGY, CASTE, CLASS AND GENDER**
**Selvy Thiruchandran**
வர்க்கமும் சாதியும் பாலும் சித்தாந்தமும்
(ஆங்கிலம்)
செல்வி திருச்சந்திரன்
கொழும்பு,
ரூ 1500.00

ஆணாதிக்கச் சமூக அமைப்பு நெடுங்காலமாகவே மாக்ஸியச் சிந்தனையாளர்களால் கடுமையாக விமர்சிக்கப்பட்டுள்ளது. இவ்விடயத்தில் ஏங்கெல்ஸின் அக்கறை பிரசித்தமானது. நவ சீனக் குடியரசின் ஆண்-பெண் சமத்துவத்தை வலியுறுத்திச் சட்டமியற்றப்பட்டது. பெண்ணுரிமை பற்றி மாஓவின் கருத்துக்கள் சீனப் புரட்சிக்கும் முன்பிருந்தே மிகவும் உறுதியானவையாயும் தெளிவானதாயும் இருந்துள்ளன. இவற்றையெல்லாம் அலட்சியஞ் செய்து மாக்ஸியத்துக்கு எதிரான ஒரு மாற்றுக் கொள்கையாகப் பெண்ணுரிமைக்கொள்கையைப் பெண்ணியச் சித்தாந்தமாக வளர்க்கும் முயற்சி மேற்கில் சில தசாப்தங்களாகவே நடக்கிறது. செல்வி திருச்சந்திரனது பெண்ணியக் கோட்பாடு இதன் ஒரு பலவீனமான தொடர்ச்சி.

நீளமான இந்நூலின் தலைப்பும் நூலின் நீளமும் ஒரு விரிவான ஆய்வை எதிர்பார்க்குமாறு வாசகரைத் தூண்டலாம். பல் வேறு தளங்களில் ஏற்கெனவே ஆராயப்பட்டுள்ள வர்க்கம், சாதி, நிறம், பால் போன்ற முரண்பாடுகள் நமது சமுதாயத்தின் சடங்கு சம்பிரதாயங்கள், 'மொழி, மதம் போன்ற சகலவற்றின் மீதும் தமது சுவட்டை ஆழப்பதிந்துள்ளன. இந்நூல் இவற்றையெல்லாம் கணிப்பிலெடுத்து எழுதப்பட்டது என எண்ணும் எவரும் ஏமாறாமலிருப்பது கடினம்.

நூலின் பெரும்பகுதி ஆசிரியையின் முனைவர் (பி.எச்டி) பட்ட ஆய்வு தொடர்பானது 9-10 ஆண்டுகள் முன்னம் வெளியான தமிழ்த் திரைப்படங்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வில் தமிழ்த் திரைப் படங்களில் ஆணாதிக்கமும் கொட்டகைகளில் படம் ஓடிய கால அளவின் அடிப்படையில் தெரியப்பட்ட இப்படங்களின் ஆணாதிக்கக் கருத்துக்குப் பெண்கள் சிலர் எவ்வாறு முகங்கொடுத்தனர் என்பதும் விவரிக்கப்பட்டுள்ளன. இப் பெண்களது குடும்ப உறவுகளும் சிறிது அலசப்பட்டுள்ளன.

சமூகவியல் ஆய்வு என்ற வகையில் இந்த ஆய்விற் கைக்கொள்ளப்பட்ட அணுகுமுறையும் ஆய்வு நெறியும் மிகவும் குறைபாடுடையன. தகவல்கள் சேகரிப்பதில் உள்ள குறைபாடுகள் ஒருபுறமிருக்க அவற்றைத் தொகுத்தளிப்பதில் உள்ள குறைகள் ஆய்வை மிகவும் பலவீனப் படுத்தியுள்ளன. இதைவிட விரிவா ா ஒரு ஆய்வை, கவனமாகத் தெ யப்பட்ட ஒரே ஒரு திரைப் படத்தையும் கூடிய அவதானத்துடன் தெரிந்தெடுக்கப்பட்ட ஒரு பெண்கள் குழுமத்தையும் வைத்துச் செய்திருக்க முடியும். இது ஒருபுறமிருக்க நூலின் உள்ளடக்கத்தைக் கவனிப்போம்.

தமிழ் சினிமா என்பது ஒரு சமூக நோயின் அறிகுறியாகவும் ஒரு பாரிய சமூக நோயாகவும் உள்ளது. தமிழ்ச் சமூகத்தின் மீது அதன் பீடிப்பு அதிகம். பெண்களை இழிவுபடுத்திக் காமவேட்கைக்குரிய நுகர்பண்டமாகச் சிறுமைப்படுத்தும் இந்த வியாபாரத் துறையில் ஆணாதிக்கத்தை விட அதிகம் கவலைக்குரிய அம்சங்கள் உள்ளன. அவற்றையெல்லாம் விடுத்து ஆணாதிக்கக் கருத்துக்களை மட்டும் மையமாக்கி அவற்றைப் பெண்கள் எவ்வாறு நோக்கினார்கள் எனவும் அதைப் பெண்ணிய நோக்கில் சிறிது உந்துவதற்கான தன் முயற்சியையும் நூலின் பெரும்பகுதி விலாவாரியாக விஸ்தரிக்கிறது.

ஒருபடம் தவறாமல், ஆடைக் குறைப்பு, ஆபாச நடனம், அர்த்தமற்ற வன்முறை, இரட்டை அர்த்தப் புளிச்சற் பகிடிகள், காமக்கிளர் ஆட்டும் கீழ்த்தரமான பாடல்கள் ஆகியன நிறைந்து யதார்த்த விரோதமான முறையில் வருகிற ஒரு சமூகத்தின் நோய் பயங்கரமானது. பெண்கள் தமிழ்த்திரைப் படங்கட்கு அதிகம் போகிறதாகவும் தெரியவருகிறது. வெறும் ஆணாதிக்க சினிமா ஆணாதிக்க ஆபாச சினிமாவாக மாறிய பின்னர் பெண்கள் சினிமாவுக்கு முண்டியடித்து ஓடுவது ஏன் என்ற கேள்விக்கான பதிலை ஆசிரியை ஏனோ தேடவில்லை. பெண்ணைக் காமநுகர்வுக்கான சதைப் பிண்டமாகக் காட்டும் சினிமா பற்றியும் அதை ஒழிக்க வேண்டிய தேவை பற்றியும் ஆசிரியை கேள்விகளைக் கேட்டிருந்தால் அது பெண்விடுதலைக்குத் தடையாக உள்ள சில விஷயங்களை அடையாளங் காட்டியிருக்கக் கூடும்.

ஆசிரியையின் பெண்ணிய நோக்கில் ஆணாதிக்கம் பிரதான முரண்பாடாகத் தனித்து நிற்பதாலோ என்னவோ, மற்ற முரண்பாடுகள் பற்றிய அக்கறை அதிகம் இல்லாததோடு மாக்ஸியமும், அதுபோல வர்க்க முரண்பாடே முரண்பாடு, மற்றெல்லாம் அற்பமானவை என்று கருதுவதாக ஆசிரியை முன்னொரு நூலில் எழுதியதை மீளவும் எழுதியுள்ளார். (ப.11) இதை மறுத்து அதிகம் எழுதுவதற்குப் பதிலாக சாதிய எதிர்ப்பு இயக்கம், தேசிய விடுதலை இயக்கங்கள், நிறவெறிக்கு எதிரான மாஓ, லெனின் போன்றோரது நிலைப்பாட்டை நினைவூட்டுவது போதுமானது. மாக்ஸிய - லெனிஸியவாதிகளது போராட்டப் பங்களிப்பை மழுப்பி மூடிக்கட்டும் முயற்சிகட்கு ஆசிரியை பலியானாரோ அல்லது பங்காளியானாரோ என்பதை அவர்தான் உறுதி செய்ய முடியும்.

பெண்ணுரிமை தொடர்பான மாக்ஸிய அணுகுமுறையை மறுதலிக்க வேண்டித் தமது பெண்ணியத்துக்கு எவர் என்ன சாயம் பூசி என்ன நாமம் சூட்டி அழைத்தாலும் அவர்களது வர்க்கப் பார்வையை அது மூடிமறைக்க உதவாது. மாக்ஸியத்தைப் பொய்ப்பிப்பதற்கு ஆசிரியை மிகவும் முயன்றுள்ளார். இதன் இன்னொரு பகுதியாக, தாய்வழிச் சமூகம் என்று ஒன்று இருந்தது என்ற ஏங்கெல்ஸுடைய கருத்து கற்பனாவாதம் சார்ந்தது என்று ஆசிரியை யாருடைய கருத்தையோ சாட்சிக்கு அழைக்கிறார். சற்றுப் பின்னர், சங்ககாலத்தின் முன்பிருந்த தாய்வழித் தன்மைகள் பின்னைக் காலத்தில் அழிவுபட்டதற்கான சான்றுகளை அலசுகிறார். அப்போது மிரொஸ்லாவ் ஹொலுப்பின் கவிதை ஒன்று மனதுக்கு வந்தது.

''பூமி சுழல்கிறது'' என்கிறார் மாணவர்
''அப்படியில்லை, பூமி சுழல்கிறது என்று
திருத்துகிறார் ஆசிரியர்.
.........
ஏனென்றால் ஆசிரியருக்கே அதிகம்
தெரியும்''

(பணிதல் மறந்தவர், மொ.பெ.கவிதைத் தொகுதியிலிருந்து)

மாக்ஸியவாதிகளுக்குக் குட்டுப் போட முயன்ற ஆசிரியை இங்கு தனக்கே குட்டுப் போட்டுக் கொள்கிறார். எட்டு ஆண்டுகள் முன்பு சாந்தி சச்சிதானந்தன் பெண்வழிச் சமூகமே இயல்பானது என்று வாதித்து எழுதிய நூல் பற்றி ஆசிரியையின் எண்ணத்தை அறிய விரும்புகிறேன்.

புத்த சமயத்தவரென்று மீள்கண்டு பிடிப்புச் செய்யப்பட்ட திருவள்ளுவர் பரத்தமை பற்றிய ஆய்வு மேற்கொள்ளாமை பற்றி ஆசிரியை ஏமாற்றம் தெரிவிக்கிறார். தேவகுமாரன் யேசு முதல் தேவதூதர் நபிகள் வரையில் பெண்ணும் ஆணும் சமம் என்று அறியத் தவறிவிட்டனர். ' மஹாஞானிகளான புத்தரும் மஹாவீரரும் இவ்விஷயங்களைக் கோட்டை விட்டு விட்டனர். சாமான்யரான வள்ளுவர் என்ன செய்ய முடியும்? (திருவள்ளுவர் பரத்தமை பற்றி சமூகவியல் ஆய்வு நடத்த அந்தக் காலத்தில் என்.ஜீ.ஓக்கள் இருந்தனவா, என்ன!) எந்தவொரு சமூக அமைப்பிலும் நிலவுகிற சமுதாய விழுமியங்கள் அக்காலத்தின் இலக்கியங்களிலும் அறநூல்களிலும் வெளிப்படுவது தவிர்க்க இயலாததே. திருவள்ளுவரது குரல் ஒடுக்கப்பட்ட மக்களின் கிளர்ச்சியின் குரலல்ல. ஆயினும் அதற்கு முன்பு ஆண்களின் பாலியல் ஒழுக்கம் பற்றிய தமிழ் மரபினின்றும் சிறிது முற்போக்கானது என்று நினைக்கிறேன். மற்றப்படி திருக்குறளோ வேறு எந்த அறநூலோ எக்காலத்துக்குமான பூரண வழிகாட்டி என்பதில் எனக்கும் உடன்பாடில்லை. ஆசிரியை, வள்ளுவர் பற்றிய கேள்வியை, இன்று பேருந்துகள் முதல் பலசரக்குக் கடை வரை எல்லாவற்றிலும் திருக்குறளை வைக்க முயல்கிறவர்களிடம் எழுப்பினால் அது நியாயம்.

நுனிப்புல் மேய்கிற பாங்கில் ஆசிரியை பல்வேறு விஷயங்களைத் தொட்டுச் செல்கிறார். அதே வேளை, அமைப்பியல் முதல் கிராம்ஸ்சி வரை அனைத்தும் அறிந்த தோரணையில் எழுதும் போது பரவலாக அறியப்பட்ட தகவல்கள் பற்றிய அறியாமை பூதாகரமாக எழுந்து நிற்கிறது. ஔவையாரை வணக்கத்துக்குரிய ஞானியருள் ஒருவராக (Saint) கூறுவது அவரது கவனயீனமான சொற்பிரயோகங்கள் பலவற்றுள் ஒன்று. கோலமிடல், கருநாடக இசை என்பன பற்றிய அவரது குறிப்புக்களில் அவை பற்றி அவர் எழுதுவதற்கு அவசியமான குறைந்தபட்ச அறிவு பற்றியும் அக்கறையில்லாமலே எழுதியுள்ளார்.

தேவதாசிகள் பற்றிய குறிப்பில் (ப.54) தேவதாசி முறை ஏற்பட்டதில் ஆணாதிக்கத்தை விடச் சனாதனமுறை (பார்ப்பனியம், பிராமணியம் என்ற சொற்களை நான் விரும்பவில்லை) கூடிய பங்கு வகித்தது. அதேவேளை, எந்தக் கலைகள் தேவதாசிகளுடனும் பிற தாழ்த்தப்பட்ட சமூகத்தினருடனும் சேர்த்துக் கருதப்பட்டனவோ அதே கலைகள் இந்த நூற்றாண்டில் பிராமணர்களது ஏகபோகமாகி விட்டன. முதலாளித்துவம் இயலுமாக்கிய இந்த மாற்றம் பொருளாதாரம் எவ்வாறு சமுதாய விழுமியங்களைப் பாதிக்கிறது என்பதையே காட்டுகிறது. சகல ஒடுக்குமுறைகளிலும் பொருளாதார உறவுகளின் பங்கு முக்கியமானது. ஏனோ, ஆசிரியையின் பார்வை இந்தத் திசைகளில் அதிகம் பாயவில்லை.

மாக்ஸிய அணுகுமுறையை நிராகரிப்பதற்கு ஆசிரியை பயன்படுத்தும் ஒரு அஸ்திரம், மாக்ஸிய வர்க்க ஆய்வில் மணமான ஒரு பெண்ணின் வர்க்கம் அவரது கணவனின் வர்க்கத்தாலேயே தீர்மானிக்கப்படுகிறது என்பதாகும். இந்தக் கூற்று, ஆசிரியை சமூக யதார்த்தம் பற்றி எவ்வளவு 'ஆழமான' அறிவுடையவராக உள்ளார் என்று கூறுகிறது. வேறுபட்ட சமுதாயப் பிரிவுகளைச் சேர்ந்தோரிடையிலான மண உறவின் பின்பு ஆணும் பெண்ணும் வெவ்வேறு வர்க்கத்தினராக வாழ்க்கை நடத்துகிறார்களா? ஆசிரியையின் ஆதங்கம் நடுத்தர வர்க்கத்து மனிதரது அந்தஸ்து தொடர்பான ஒன்றேயொழிய வர்க்க சமுதாயத்தில் மனிதரது இருப்புப் பற்றியதல்ல என்பதையே அவரது குற்றச்சாட்டு நிறுவுகிறது.

இன்று தமிழ் எழுத்துலகில், குறிப்பாகத் தமிழகத்தில், பல புது இயக்கங்கள் வந்து போகின்றன. எல்லாவற்றுக்கும் பொதுவாக உள்ளது புத்திஜீவிப் பம்மாத்து. நிறைய வாசித்து அறிந்ததாக உலகுக்குக் காட்டும் இப்போலிப் பண்டித மனோபாவம் ஈழத்திலும் சிறிது தோற்றித்தான் இருக்கிறது.

ஆசிரியையின் ஆய்வுக்குட்படுத்தப்பட்ட பெண்கள் 120 பேரில் 33 பேர் பிராமணர், 57 பேர் இடைப்பட்ட சாதியினர் என்று அவர் கருதும் முதலியார், பிள்ளை செட்டிமார் போன்ற மேற்தட்டுச் சாதிகளையும் பிற்படுத்தப்பட்ட சாதிகளையும் சேர்ந்தோர். 30 பேர் ஆதிதிராவிடர் என அவர் அழைக்கும் தலித்துக்கள். ஆயினும் 31 பக்கங்கள் பிராமணப் பெண்கள் பற்றிய குறிப்புகட்கும் 19 பக்கங்கள் இடைப்பட்ட சாதியினருக்கும் 13 பக்கங்கள் தலித்துகட்டும் ஒதுக்கப்பட்டுள்ளன. இது ஆசிரியையால் கீழ்த்தட்டு மக்களுடன், அவர்கள் பெண்களாக இருந்தபோதும், நெருக்கத்தை ஏற்படுத்த இயலாமையைக் குறிக்கிறதா? அல்லது அவரது தெரிவிலேயே விகிதத்திற்கும் அதிக அழுத்தம் பெற்ற பிராமணர் ஆய்வில் மேலும் அழுத்தம் பெறுவதைக் குறிக்கிறதா?

இந்தப் பின்னணியில், நூலின் முற்பகுதியில் அவர் அம்பட்டன், பள்ளன் என்றவாறு இரண்டு சாதிகளைக் குறிப்பிடுவதையும் மற்ற எந்தச் சாதியையும் ஒருமையில் அழையாமல் பன்மையில் குறிப்பிடுவதையும் பற்றிய விளக்கம் நமக்கு அவசியமாகிறது. ஆசிரியை சாதி உணர்வு மிகுந்தவராக இல்லாமலிருக்கலாம். ஆணாதிக்கச் சொற்பிரயோகம் பற்றிக் கண்டிப்பாகக் குற்றங் கூறுகிற ஒருவரது சொற்பிரயோகத்தில் உயர் சாதி ஆதிக்கம் தென்படுவது நியாயமா என்பதுதான் என் கேள்வி.

இன்று தமிழ் எழுத்துலகில், குறிப்பாகத் தமிழகத்தில், பல புது இயக்கங்கள் வந்து போகின்றன. எல்லாவற்றுக்கும் பொதுவாக உள்ளது புத்திஜீவிப் பம்மாத்து. நிறைய வாசித்து அறிந்ததாக உலகுக்குக் காட்டும் இப்போலிப் பண்டித மனோபாவம் ஈழத்திலும் சிறிது தொற்றித்தான் இருக்கிறது. இது பலரது எழுத்து நடையைப் பாதிக்கிறது. எனவே தான் வெகு சாதாரணமாக எல்லாருக்கும் எட்டக்கூடிய தகவல்கட்கெல்லாம் சான்றாதாரங்களும் துணை நூல்களும் சாட்சிக்கு அழைக்கப் படுகின்றன. ஆசிரியை பட்டியல் போட்ட பலவேறு ஆய்வுமுறைகளில் ஒன்றேனும் எவ்வாறு அவரது ஆய்வில் முறையாகப் பாவிக்கப்பட்டிருக்கிறது என்பதற்கு ஆதாரம் தெரியவில்லை. சும்மா புறநானூற்றுச் செய்யுள்களைக் குறிப்பிடக்கூடக் கைலாசபதியும், ராமானுஜனும் தேவைப் படுகிறார்கள். இந்த மாதிரி நிறையவே சொல்லலாம்.

தமிழ்ச் சொற்களைச் சரிவர உச்சரிப்பதற்கான சொற்பெயர்ப்பு விதிகள் நூலிற் தரப்பட்டுள்ளன. ஆயினும் அவை கணிசமான அளவில் மீறப்பட்டுள்ளன. ஆங்கில மொழிப்பிரயோகத்திற் கூட ஆங்காங்கே மிகுந்த குழப்பமான வாக்கிய அமைப்புக்கள் உள்ளன. இவை எளிதாகத் தவிர்த்திருக்கக் கூடியவை.

ஆசிரியையின் ஆய்வு உபயோகமற்றது என்பது என் முடிபல்ல. ஆயினும் ஆய்வுத் தகவல்களை எல்லாம் திரட்டியவாறே நூலாகத் தருவதற்கு அவசியமில்லை. இந்த நூலை ஆங்கிலத்தில் ஆயிரத்தி ஐநாறு ரூபா (கொள்ளை மலிவு) விலையில் வெளியிடுவதற்குப் பதிலாக அதன் முக்கியமான தகவல்களை ஒரு சிறு நூலாகப் பிரசுரித்திருந்தால் அது கூடிய அளவுக்குப் பயன்பட்டிருக்கும்.

**தேசபக்தன்**

நன்றி - நூலகத்திட்டம்



# தமிழ் நாட்டின் கூத்து அரசியல்.

தமிழ் நாட்டின் அரசியல் களத்தை நோக்கினால் எப்படி அவற்றை அர்த்தப்படுத்துவது என்றே புரியவில்லை. கருணாநிதியின் ஊழல் உச்சத்திற்குச் சென்றதாலேயே எம்.ஜி.ஆரின் பெயரால் ஜெயலலிதா பதவிக்கு வந்தார். ஆனால் ஜெயலலிதா ஆட்சியில் செய்த ஊழலும் அட்டகாசமும்



எல்லா ஊழல் மன்னர்களையும் மூக்கில் விரல் வைக்க விட்டு விட்டது. கடுமை கொடுமை மிடிமை ஊழல் உல்லாசம் உடமைசேர்ப்பு யாவும் ஜெயலலிதா - சசிகலா ஆட்சியில் தாண்டவமாடி நின்றன. தட்டிக் கேட்க முற்பட்ட சிலர் வெட்டியே வீழ்த்தப்பட்டனர். மக்கள் வெறுப்படைந்தனர். கருணாநிதி பரவாயில்லை என்ற அளவுக்கு மக்கள் மனம் மாறி மீண்டும் கலைஞரை ஆட்சிபீடத்தில் அமர்த்தினார்கள்.


ஜெயலலிதாவின் ஊழல்கள் மோசடிகள் அதிகார துர்ப்பிரயோகம் யாவும் வெளியில் கொண்டு வரப்பட்டன. ஏற்கனவே அவரது உடன் பிறவாச் சகோதரி மேற்கூறிய காரணங்களுக்காக சிறையில் வைக்கப்பட்டார். ஜெயலலிதா அதிர்ந்து போய் சசிகலாவோடு ஒட்டுமில்லை உறவும் இல்லை. நான் யாரோ அவர் யாரோ என்று அறிக்கை விட்டார். எழுபத்தைந்து கோடி ரூபாய் செலவில் தானே முன்னின்று திருமணம் நடாத்திய தனது வளர்ப்பு மகனை தனக்குத் தெரியவே தெரியாது என்றும் ஜெயலலிதா கூறினார். எப்படிக் கூறியும் இந்தியச் சட்டம் அவரை கூட்டிச் சென்று கம்பிகளுக்குப் பின்னால் பூட்டிக் கொண்டது. எதிர்காலமே இருண்டது போல ஜெய்யலலிதாவின் நெருக்கமானவர்கள் நினைத்தார்கள். எந்தச் சட்டத்திலும் அதிகம் அகப்படுவது சிறிய மீன்கள் தான். பெரிய சுறாக்களும் திமிங்கிலங்களும் தப்பி விடவே செய்யும். பிணையில் வெளியே ஜெயலலிதா வந்தார். அத்துடன் அவரது உடன்பிறவாச் சகோதரியும் வந்தார். உடைந்து போனதாக உலகத்திற்குக் காட்டிய உறவு புதிய உத்வேகம் பெற்ரது. சசிகலா என்னுடனேயே இருப்பார் என்றும் எம்மை யாரும் பிரிக்க இயலாது என்றும் ஜெயலலிதா அறிக்கை விட்டுள்ளார். அதனை கொடுக்கல் வாங்கல் அந்தரங்க உறவின் காரணம் என்று ஏதாவது சொல்லலாம்.

ஆனால் ஜெயலலிதாவை ஊழல் சக்கரவர்த்தினி என நாளாந்தம் திட்டித் தீர்த்து வந்த ம.ம.தி.மு.க. தலைவர் வை.கோபாலசாமி அண்மையில் ஜெயலலிதாவுடன் இணைந்து கொண்டதன் மர்மம் தான் பலருக்குப் புரியாத புதிராக இருக்கிறது. வை.கோ.வைப்பற்றி தமிழ் நாட்டில் ஒரு தரமான அரசியல் தலைவராக வரும் வாய்ப்புடையவர் என்ற எதிர்பார்ப்பு இருந்தது. கடந்த தேர்தலில் படுதோல்வி காணும் வரை தமிழ் நாட்டு மக்களின் முக்கிய பிரச்சினைகளை முன்வைத்து அரசியலும் நடாத்தி வந்தார். அதனால் மாக்சிஸ்ட் கம்யூனிஸ் கட்சியுடன் கூட்டும் அமைத்திருந்தார். அக்கூட்டின் முக்கிய அம்சம் கூட ஜெயலலிதாவின் ஊழல் ஆட்சியை எதிர்ப்பதாகவே அமைந்திருந்தது. மேடை மேடையாக வை.கோ.ஜெயலலிதாவை கிழித்து வைத்தார். ஆனால் இன்று நெடுஞ்செழியனின் வீட்டில் வை.கோ.வும் ஜெயலலிதாவும் ஒன்றாகி விட்டனர். அது தற்செயல் என்றோ தனிப்பட்டதென்றோ கூட வை.கோ.கூறவில்லை. இருவரும் இணைந்து அரசியல் செய்தால் என்ன தப்பு என்றும் கேட்டு வைத்துள்ளார் வை.கோ.

இது மட்டுமல்ல சுப்பிரமணிய சுவாமி ஜெயலலிதாவுக்கு எதிராக ஆளுனர் மாளிகை தொட்டு நீதிமன்றங்கள், மக்கள் மன்றங்கள், டெல்லியில் பிரதமர் அலுவலகம், ஜனாதிபதி மாளிகை வரை சென்று ஊழல் பட்டியல் வெளியிட்டு அமர்க்களப்படுத்தியவர். அந்த மனிசனும் தற்போது ஜெயலலிதாவுடன் இணைந்து கருணாநிதியை எதிர்க்கப் போவதாகக் கூறி நிற்கிறார்.

தமிழ் நாட்டின் அரசியல் தளத்திலிருந்து வெளிவரும் இச்செய்திகளைப் பார்க்கும் போது அங்குள்ள அரசியல் எத்தகைய தரம் கொண்டது என்பதையே ஊகிக்க வைக்கிறது. கூத்தாடிகளின் அரசியல் தலைமையும் சொத்துடமை வர்க்க அரசியலை திராவிடர் இயக்கத் திரையினால் மறைத்துக் கொண்டமையும் இதுபோன்ற குத்துக்கரணங்களேயே தோற்றுவிக்கும். தமிழ் நாட்டு மக்களின் அன்றாடப் பிரச்சினைகளும் அடிப்படைப் பிரச்சினைகளும் நிரம்பி வழிகின்றன. அவை பற்றியோ அன்றி அவற்றைத் தீர்க்கும் வழிவகை பற்றியோ இந்த திராவிட இயக்கத் தலைமைகள் சிந்தித்தது கிடையாது. பதவிக்கு வந்து கொள்வதும் அதன் மூலம் தம்மையும் தமது வர்க்கம் சார்ந்தவர்களை வளப்படுத்திப் பாதுகாப்பதுமே அவர்களது உள்ளார்ந்த இலட்சியமாகும். அதற்காக முன்னுக்குப் பேசியவைகளைப் பற்றி கவலைப்பட்டாமலேயே எவர் எவருடனும் ஐக்கியப் பட்டுக் கொள்வர். இத்தகைய கூத்து அரசியல் தான் தற்போது தமிழ்நாட்டில் நடைபெறுகிறது.

## 'இவர்' யார் ?



வியட்னாமிலுள்ள கிமிலியேனில் 1890 ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆம் திகதி பிறந்தார். 1969 ஆம் ஆண்டு செம்டெம்பர் மாதம் 3 ஆம் திகதி வியட்னாமிலுள்ள ஹனோயில் இறந்தார். இவரது 9 வயதிலேயே புரட்சிகரப் போராட்டத்துடன் இவர் இணைந்து கொண்டார். இவரது தந்தையார் பிரான்சிய ஏகாதிபத்தியத்திற்கு எதிரான புரட்சிகர போராட்ட இயக்கத்திலீடுபட்டிருந்த போது அவருக்கு போராட்டத்துக்கு தேவையான இரகசிய தகவல்களை எடுத்துச் செல்பவராக இருந்தார். அவ்வாறு இரகசிய தகவல்களை எடுத்துச் செல்லும்போது அவருக்கு வயது ஒன்பது.

1941 ஆம் ஆண்டு தொடக்கம் 1974 வரை யப்பான், பிரான்சு, அமெரிக்கா ஆகியவற்றின் ஆதரவைப் பெற்ற தென்வியட்னாமிற்கு எதிராக வட வியட்னாமிய மக்கள் தொடர்ந்து போராடி வந்தனர். ஏகாதிபத்தியங்களால் துண்டாடப்பட்ட வியட்னாம் வட வியட்னாம், தென்வியட்னாம் என்று பிரிந்திருந்தன.. அதில் தென்வியட்னாம் ஏகாதிபத்தியத்தின் பிடிக்குள் இருந்ததுடன் வடவியட்னாமிற்கு பாரிய அச்சுறுத்தலாக இருந்துவந்தது.

1930 ஆம் ஆண்டு வியட்னாம் கம்யூனிஸ்ட் கட்சியை ஆரம்பித்து அதன் தலைமையை பொறுப்பேற்றார். கட்சியின் தலைமையில் 'வியட்மிங்' எவ்ற கெரில்லா பிரிவை ஏற்படுத்தினார். இவர் தொடர்ந்து பிரான்சிய, யப்பானிய ஆக்கிரமிப்பு படைகளுக்கு எதிராக போராடிவந்தார். 1945 ல் பிரான்சின் ஆக்கிரமிப்பு படைகள் வியட்னாமில் தோற்கடிக்கப்பட்டு வியட்னாம் விடுதலை பெற்றது.

1946 ஜனவரியில் (வட) வியட்னாமின் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டார். தொடர்ந்து தென் வியட்னாமிலிருந்து தொடுக்கப்பட்ட ஏகாதிபத்திய நடவடிக்கைகளுக்கு எதிராக கடுமையாகப் போராடி வந்தார்.

1969 செம்ரெம்பர் 3 ஆம் திகதி இறந்தாலும் அவரால் வழிகாட்டப்பட்ட, நிர்மானிக்கப்பட்ட சோஷலிஸ்ட் (வட) வியட்னாமின் வீரமிகு போராட்டத்தால் 1975 இல் அமெரிக்க படைகள் விரட்டியடிக்கப்பட்டு பிற்போக்கு தென்வியட்னாம் தோற்கடிக்கப்பட்டது. அதன் பிறகு வடதென் வியட்னாம்கள் சோஷலிஸ வியட்னாமாக இணைந்தன.

இவர் அரசியல் ரீதியாக மட்டுமன்றி, கெரில்லா யுத்தத்திலும் மக்கள் விடுதலைப் போராட்டப் பாதைக்கு பாரிய பங்களிப்புகளை செய்தார். மக்கள் கெரில்லா யுத்த வீரனெனவும், வியட்நாம் விடுதலைப் போராட்ட வீரனெனவும் அழைக்கப்படுகின்ற இவர் சிறந்த கவிஞரும் ஆவார்.

இவரின் சிறை வாழ்க்கை குறிப்புகள், விடுதலைப் போராட்ட உணர்விற்கான அடிப்படை பாடமென போற்றப்படுகின்றது.

இவர் தான் அந்த குள்ளமான மனிதர். சிறந்த மனிதாபிமானி, முன்னுதாரணமும் மிக்க கம்யூனிஸ்ட் தோழர் ஹோ சீ மீங்.

# பெண் சிசுக் கொலைகள்

இந்தியாவின் ராஜஸ்தான் மாநிலத்தில் ஒரு குக்கிராமத்துக்கு விஜயம் செய்தால் ஒரு வினோதமான தகவலை அறிந்து கொள்ள முடியும். பெரும்பாலும் விவசாயிகளைக் கொண்ட அக்கிராமத்தில் ஆண் குழந்தைகள் மட்டுமே உண்டு. அந்தக் கிராமத்தவர்களிடம் பெண் குழந்தைகள் எல்லாம் எங்கே சென்று விட்டனர் என்று கேட்டால், ''நாங்கள் அவர்களைக் கொன்றுவிட்டோம். பெண் குழந்தைகளுக்கு இந்தக் கிராமத்தில் இடம் இல்லை. எங்களது வளங்கள் மட்டுப்படுத்தப்பட்டது. எங்களால் ஆண்குழந்தைகளுக்கு மட்டுமே உணவு கொடுத்து உடை கொடுத்துக் காப்பாற்ற முடியும்'' என்று பதில் வரும்.

கவலைக்குரிய விடயம் என்னவென்றால் பெண் குழந்தைகளைக் கொலை செய்வதென்பது இந்தக் கிராமத்திற்கு மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டதொன்றல்ல. இந்தியாவின் வெவ்வேறு கிராமங்களில் இது நடைபெறுகின்றது.

நவீன தொழில் நுட்பத்தின் பயனாக இந்த உபகண்டத்தில் கர்ப்பவதிப் பெண்கள் தமக்குப் பிறக்கப் போவது ஆண் பிள்ளையர் அல்லது பெண் பிள்ளையர் என்பதை முன்கூட்டியே அறிந்து கொண்டு பிறக்கப் போவது பெண்குழந்தை என்றால் அதை டாக்டர்களின் ஒத்துழைப்பபோடு கருச்சிதைவு செய்கின்றனர். ஹரியானா மாநிலத்தில் மும்பாய் நகரில் அல்றாசோனிக் கருவிகள் பொருத்தப்பட்ட வாகனங்களில் டாக்டர்கள் வீடுவீடாகச் சென்று கர்பவதிகளைச் சோதனை செய்து பெண் பிள்ளையெனக் கண்டால் சம்பந்தப்பட்ட பெண் கருச்சிதைவு செய்ய் வேண்டுமெனக் கேட்கும் பட்சத்தில் கருச்சிதைவு செய்கின்றனர்.

பெண் குழந்தைகளை கொலை செய்வதில் தமிழ் நாட்டில் பதிவு செய்யப்பட்ட கிராமம் உசிலம் பட்டி. இது மதுரையில் உள்ளது. இக்கொலைகளைச் செய்பவர்கள் வேறு யாருமல்ல தாய்மார், பேத்திமார், மாமிமார், இவர்களோடு மருத்துவ தாதிமார்களும் சில சமயங்களில் சேர்ந்துள்ளார்கள். பிறந்த குழந்தையை உயிருடன் இருப்பதற்கு முதற் பணி செய்ய வேண்டிய தாதியும் கொலையில் ஈடுபடுவது எத்தனை அக்கிரமம்.

அண்மையில் சாக் நாடுகளில் ''பெண் குழந்தைகள் தொடர்பாக நான்கு நாள் மகாநாடொன்று கொழும்பு வை.டபிள்யூ.சீ.ஏயின் ஏற்பாட்டில் இடம் பெற்றது. அதில் பல திடுக்கிடும் தகவல்களை கலந்துரையாடலின் போது இந்தியப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

இந்தியாவில் பெண் குழந்தைகளைக் கொல்வதற்கு கீழ்க் காணும் வழிவகைகளைக் கையாள்கின்றார்கள் என்ற தெரிவிக்கப்பட்டது.

1) கள்ளிப் பாலைப் பருக்குவது.

2) தலையணை ஒன்றினால் முகத்தில் அழுத்தி மூச்சுத் திணறவைத்துக் கொல்வது.

3) உமியை மாவாக அரைத்து திரவத்துடன், சேர்த்துப் பருக்குவதன் மூலம் சமிபாட்டுத் தன்மையைத் தடுத்து உபாதிப்பட்டு இறக்க வைத்தல்.

4) நஞ்சு கலந்தபாலை அல்லது புகையிலையை அரைத்த பசையுடன் ஊட்டிக் கொலை செய்தல்

5) வாய்க்குள் கருமம் உப்பு அல்லது யூறியாவை திணித்துக் கொலை செய்தல்.

இவ்வாறு இந்தியாவில் மட்டுமன்றி பல்வேறு மூன்றாம் உலக நாடுகளில் பெண்சிசுக் கொலைகள் இடம் பெறவே செய்கின்றன. இதற்கு அடிப்படைக் காரணம் பெண் பற்றி பல ஆயிரம் வருடங்களாகக் கட்டியெழுப்பப்பட்டு வந்த தவறான கருத்தியல் கண்ணோட்டங்களும் அவ்வசார்ந்த வலிமை மிகு சமூக நடைமுறைகளுமேயாகும். பெண்கள் மீதான சகல வகை ஒடுக்குமுறைகளுக்கும் எதிரான போராட்டங்கள் ஏனைய ஒடுக்குமுறைக்கெதிரான போராட்டங்களுடன் இணைத்து முன்னெடுக்கப்படும் போதே உண்மையான விழிப்புணர்வும் விடுதலை உணர்வும் பெற இயலும்.

நன்றி - நூலகத்திட்டம்



# குடாநாட்டில் கண்டதும் கேட்டதும்

குடாநாட்டில் இரவு 9 மணி தொடக்கம் அதிகாலை 5 மணி வரை ஊரடங்கு சட்டம் அமுல் படுத்தப்படுகிறது. இருந்தும் நடைமுறையில் மாலை 6 மணி முதல் காலை 6 மணி வரை மக்கள் வெளியே நடமாடுவதே இல்லை. அப்படியிருந்தும் அடிக்கடி அங்கு கொள்ளைகள் இடம் பெற்று வருகின்றன. சிறுசிறு களவுகள் தொடக்கம் பாரிய கொள்ளைகளும் நடைபெறுகின்றன. இவற்றை நடாத்துபவர்கள் யாராக இருக்கும் என்பது பற்றி மக்கள் மத்தியில் பலவாறு பேசிக் கொள்ளப்படுகிறது. கைதேர்ந்த உள்ளூர் கொள்ளையர் என்றும், அங்குள்ள இயக்கங்கள் என்றும் சிவில் உடையில் பாதுகாப்புப் படையினர் என்றும் மக்கள் பேசிக் கொள்கிறார். உதாரணத்திற்கு அண்மைய சம்பவம் ஒன்றைக் கூறுகிறேன். தென்மராட்சி மட்டுவில் பகுதியில் மகாவித்தியாலயத்திற்கு அருகாமையில் ஒரு வீட்டு கதவு நடு நிசி நேரம் தட்டப்படுகிறது. வீட்டாருக்கு அச்சம். இருப்பினும் திறந்தே ஆக வேண்டும். வீட்டார் துணிவை வரவழைத்துக் கொண்டு வீட்டைத் திறக்கிறார்கள். ஆனால் வந்தவர்களோ கொள்ளையர். மேலும் துணிவுடன் அவ்வீட்டார் ஒத்த குரலில் கூக்குரல் இடுகின்றனர். கொள்ளையிட வந்தவர்களுக்கு திகிலாகிறது. காரணம் அவ் வீட்டுக்கு அண்மையில் ராணுவ சென்றி உள்ளது. வீட்டாரும் அக்கம் பக்கமும் எழுப்பிய அவலச் சத்தத்தைக் கண்ட கொள்ளையர் தமது முயற்சியைக் கைவிட்டு ஓட்டம் பிடிக்கிறார்கள். இக்கூக்குரல் சத்தத்தை செவிமடுத்த சென்றியில் இருந்த ராணுவத்தினர் தப்பி ஓடிய கொள்ளையர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். அவர்களில் இருவர் சூடுபட்டு இறந்தனர். மறுநாள் இறந்தவர்கள் இருவரும் பாதுகாப்புப் படையினரால் அடையாளம் காணப்பட்ட போதிலும் அவர்கள் யார் என்ற விபரம் வெளியிடப்படாது மூடி மறைக்கப்பட்டது. கொள்ளையர்கள் யாராக இருப்பார்கள்?

* * * *

வட்டுக்கோட்டை அராலி தெற்கில் யோ.விஷாலினி என்னும் 18 வயது மாணவி கடந்த 12-07-97 அன்று சமன் குமாரதுங்கா என்ற ராணுவ சிப்பாயால் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார். அந்தச் சிப்பாயின் கொடூரத்திற்கு அத்துலு குமார என்ற மற்றொரு சிப்பாய் காவல் காத்து நின்றுள்ளார். மேற்படி சம்பவம் பட்டப்பகலில் இடம் பெற்றுள்ளது. மேற்படி சிப்பாய் சக இராணுவத்தினரால் பிடிக்கப்பட்டு மக்கள் முன்வைத்து அடிக்கப்பட்டு சுன்னாகப் பொலீசில் ஒப்படைக்கப்பட்டு தற்போது விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார். இது போன்ற சம்பவங்கள் எவ்வகையிலும் மூடி மறைக்கப்பட மாட்டாது என உயர் ராணுவ அதிகாரி கூறியுள்ளார். மூடி மறைக்கப்பட முடியாவிட்டால் இப்படித்தான் சொல்ல வேண்டும். மறைத்தாலும் மறைக்காவிட்டாலும் ராணுவத்தின் பாலியல் வல்லுறவினால் மற்றுமொரு பெண் கொழுந்து கிள்ளி எறியப்பட்டுள்ளது.

* * * * *

மேற்படி சம்பவம் இடம் பெற்று அச்செய்தியே குடாநாட்டில் அதிர்வை ஏற்படுத்திக் கொண்ட இரு நாட்களில் வடமராட்சி நோக்கிச் செல்லும் வல்லை வெளியில் முகாமிட்டிருக்கும் இராணுவத்தினரால் 14-07-97 ல் இ.சந்திரகலா என்னும் 22 வயதுடைய தொண்டர் ஆசிரியை பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார். மேற்படி சம்பவம் மூடி மறைக்கக் கூடிய சூழலே நிலவுகிறது. ஏனெனில் ஒன்றை அம்பலப்படுத்தினால் ஒன்பதை மூடிமறைக்கலாம் அல்லவா?

* * * * *

வடக்கிற்கு பொருட்களை ஏற்றிச் சென்று திரும்பும் வழியில் புலிகள் இயக்கத்தால் வடகொரியக் கப்பல் 'மொறான் பொங்' கைப்பற்றப்பட்டது. இச்செய்தி குடாநாட்டில் செவி மடுக்கப்பட்ட அடுத்த கணமே அங்குள்ள பெரிய சிறிய வியாபார நிலையங்களில் இருந்து வந்த அத்தியாவசியப் பொருட்கள் யாவும் மாயமாய் மறைக்கப்பட்டன. மக்கள் அவற்றை வாங்கச் சென்றவேளை 'முடிந்துவிட்டன', 'வரவேண்டும்', 'வந்தால் தரலாம்' என்ற வாசகங்களே கிடைத்தன. ஒரிரு நாட்கள் கழித்து சீனி, மா, மண்ணெண்ணை போன்ற பொருட்கள் கூடிய விலைகளில் விற்க ஆரம்பித்தன. கப்பல் கடத்தியவுடன் குடாநாட்டில் ஒரேயடியாகச் சாமான்கள் முடிவடைந்து விட்டதாகவும் வியாபாரிகள் ஏதோ கஷ்டப்பட்டு கொழும்புக்கு வந்து சிரமத்துடன் தோள்களில் சுமந்து சென்று தமது சொந்த இன மக்களுக்கு சுமந்து வந்த கூலியை மட்டும் வைத்து விற்கிறார்கள். என்னே கொள்ளை லாபமும். பதுக்கலும். இத்தகைய கொள்ளைலாபப் பதுக்கல் பிரகிருதிகள் சமாதானத்தையும் இயல்பு வாழ்க்கையும் எப்படி விரும்புவார்கள். இவர்கள் தான் எரிகிற வீட்டில் விறகு பொறுக்குபவர்கள்.

* * * * *

குடாநாட்டில் தற்போது இரவு நேரங்களில் வெள்ளை வான் நடமாடி வருகின்றதாம். ஏற்கனவே கொழும்பிலும் சுற்றுப் புறங்களிலும் மட்டுமன்றி கிழக்கிலும் இவ்வெள்ளை வான் மிகவும் பிரசித்தி பெற்றதாகும். தற்போது குடாநாட்டில் ஆங்காங்கே நடு இரவில் இவ்வான் திடீர் திடீரென வாசல்களில் வந்து நின்று படலைகளைத் தட்டி சிலரை கூட்டிச் செல்கிறதாம். இதனால் குடாநாடு மற்றொரு பீதிக்குள் தள்ளப்பட்டுள்ளது.

* * * * *

குடாநாட்டில் இரவு நேரத்தில் யாருக்காவது மாரடைப்பு நோய் ஏற்பட்டு விட்டால் பெரும்பாலும் இறக்க வேண்டியது தான். அந்த நோய் ஏற்பட்டு இருமணி நேரத்திற்குள் உரிய வைத்தியமும் மருந்தும் அவசியம். அதனைப் பெறக் கூடிய வசதி யாழ் மத்திய போதனா வைத்தியசாலையில் மட்டுமே உண்டு. ஆனால் அவ்வைத்தியசாலையைச் சென்றடைவது இயலாத ஒன்றாகும். இரவு ஊரடங்கு பயணத்தை அனுமதிப்பதில்லை. இருந்தும் வைத்தியசாலைக்கு என்று கைலாம்புடன் புறப்பட்டாலும் ஒவ்வொரு சென்றியிலும் விபர விளக்கம் கூறிச் செல்வதாயின் பலமணிநேரம் சென்றுவிடும். அதனால் மாரடைப்பு நோயாளி பெரும்பாலும் இறந்து விடவே செய்வார்.

இது போன்றதே பிரசவத்திற்கு ஆளாகும் கர்ப்பிணித் தாய்மாரின் அவலமுமாகும். ஒவ்வொரு சென்றியிலும் ராணுவத்திற்குப் பதில் கூறும் பிரச்சினை மட்டுமன்றி அவ்வாறானவர் கர்ப்பிணித் தாய்தானா? என்பதை மிக நுணுக்கமாக ஆராய்ந்த பின்பே ஒரு சென்றியில் இருந்து மறுசென்றிக்குச் செல்ல அனுமதிக்கப்படுகின்றனராம். யாரைத்தான் விட்டது ராணுவம். இதுபோன்ற தடை தாமதங்களால் சில கர்ப்பிணித் தாய்மார் வழி தெருவில் செத்துப் போயும் உள்ளனர். சிலர் இவ் வழிச் சோதனைக்குப் பயந்து வீட்டிலேயே பழைய முறைப் பிரசவங்களைச் செய்யும் கொள்கின்றனர். அதனால் சில சாவுகள் ஏற்பட்டும் உள்ளன.

# நெஞ்சு பொறுக்குதில்லையே!...

எமது நாடு எது? இலங்கை என்று ஒரு இடைக்கேள்வி. பல இன பல மதங்களைச் சார்ந்த மக்கள் வாழும் 'பல்லின நாடு' என்பது சிறுபான்மைத் தேசிய இனங்களின் நிலைப்பாடு.

இலங்கைச் சிறிய தீவின் அரசியல் யாப்பு ''மதசார்பின்மை'' என்பதை நிராகரித்துள்ளது. 'பௌத்த சிங்கள' நாடு என்பதில் பெருமிதங் கொள்கிறது.

இலங்கைத் தீவு முழுவதும் வாழுவோர் தம்மை 'இலங்கையர்' என்றே அழைக்க வேண்டும், தமிழர், முஸ்லீம்கள் என அழைக்கப்படுவது இனவாதம் ஆகும். அல்லது இனவெறியாகும் என்பது சிங்கள பௌத்த தேசியவாதக் கோட்பாட்டின் மீள் கண்டுபிடிப்பாகும். இது ஏனைய தேசிய இனத்தவர்களின் மீது தன்னடையாளத்தை மறுக்கும் தேசிய அகங்காரமாகும்.

'பௌத்த சிங்கள' நிலைப்பாட்டைக் கைவிட்டு 'பல்லின மதசார்பற்ற' நாடு என்ற பிரகடனம் செய்யும் போது எல்லோரும் தம்மை 'இலங்கையர்' என அழைப்பதையிட்டுப் பெருமைப்படலாம்.



**எதிர்நீச்சல் வல்லியன்**

இந்த நாட்டில் சிங்களப் பேரினவாதம் ஏனைய சிறுபான்மை இன மக்களைப் புறக்கணித்துப் பாரபட்சமாக நடத்தி அரச பயங்கர வாதத்தைத் தோற்றம் பெறச் செய்து இனஒடுக்கல் யுத்தத்தை நடத்திக் கொண்டிருக்கிறது.

பாடசாலைப் பிள்ளைகளின் பிஞ்சு நெஞ்சங்களிலே இன வெறுப்பைத் தூண்டும் விதமாக வரலாற்றுப் பாடநூலிலே ஏனைய சிறுபான்மை இனத்தவரை 'வந்தேறு குடிகள்' என கல்வியமைச்சின் பாடத்திட்டம் குறித்துள்ளது. தமிழர்கள் என்றால் 'பறதெமில' -அந்நியத் தமிழன் எனப் பட்டம் சூட்டியுள்ளது.

ஒடுக்கல் என்பது வர்க்க அடிப்படையில் மட்டுமன்றி இன வடிவத்திலும் மதவடிவத்திலும் இந்த நாட்டில் நடாத்தப்படுகிறது. எனவேதான் ஒடுக்கலுக்குள்ளான மக்கள் தம்மைத் 'தமிழர்' என்றும், 'முஸ்லிம்' என்றும் பிரகடனப் படுத்துகின்றனர்.

மலையகத் தமிழர் சிங்கள மக்களுடன் புவியியல் ரீதியாகச் சேர்ந்து வாழும் போதும் 'தமிழர்' என்ற காரணத்தாலும் 'தொழிலாளர்' என்ற தன்மையாலும் 'இந்தியாவில் இருந்து இறுதியாக வந்தவர்கள்' என்பதாலும் இன ஒடுக்கலுக்கு உள்ளாகியுள்ளனர். எனவேதான் 'மலையகத் தமிழர்' என்று தம்மைப் பிரகடனப்படுத்துகின்றனர்.

ஒடுக்குதலுக்குள்ளான மக்கள் தம்மை அதே அடிப்படையில் பிரகடனப்படுத்தி நிற்பதே இந் நிலைமையின் வெளிப்பாடாகும்.

'பௌத்த சிங்கள நிலைப்பாட்டில் 'இலங்கையர்' எனப் பிரகடனம் செய்வோர் யார்? இவர்கள் சாதாரண கிராமிய சிங்கள விவசாயிகளோ -நகர்ப்புறச் சிங்கள தொழிலாளர்களோ அல்ல. அப்படியானால் இவர்கள் யார்? இவர்கள் தான் நிலமானிய சமூகத்தின் ஆண்ட பரம்பரையைச் சேர்ந்தவர்கள். காலனித்துவ சமூகத்தில் ஏகாதிபத்தியவாதிகளுடன் கூடிக் குலாவி தமது பரம்பரையை -தமது பணத்தைப் பதவியைப் பாதுகாத்த நிலவுடமையாளர்.

இவர்களிடம் சாதியத் திமிர், பணத்திமிர், பதவித்திமிர், பரம்பரைத் திமிர், மதத்திமிர், இனத்திமிர் அனைத்தும் ஒன்றுசேரக் குடிகொண்டுள்ளது. எனவேதான் ஆண்ட பரம்பரைத் திமிரில் 'சிங்கள பௌத்த' சுலோகத்தைத் தூக்கிப் பிடிப்பதும் இலங்கையை முழுமையாக ஆளும் 'சப்புமல் குமரையா' சம்பவங்களும் நிலவுவதொன்றும் தற்செயல் நிகழ்வுகளல்ல.

அரச பயங்கரவாதத்தால் பிரசவிக்கப்பட்ட இனப்போரில் படுகொலை செய்யப்பட்ட தமிழ் -முஸ்லிம் மக்கள் தொகை ஐந்தாயிரமென்றால் வறுமை - அறியாமை காரணமாக சிங்கள ஆண்ட பரம்பரையின் 'பௌத்த ஆட்சியில் தற்கொலை செய்து கொண்ட சாதாரண பெரும்பான்மைச் சிங்கள - தமிழ் - முஸ்லிம் மக்களின் தொகை எழுபதாயிரம் ஆகும். இதில் தொண்ணூறுவீத

ஒடுக்கல் என்பது வர்க்க அடிப்படையில் மட்டுமன்றி இன வடிவத்திலும் மதவடிவத்திலும் இந்த நாட்டில் நடாத்தப்படுகிறது. எனவே தான் ஒடுக்கலுக்குள்ளான மக்கள் தம்மைத் 'தமிழர்' என்றும், 'முஸ்லிம்' என்றும் பிரகடனப்படுத்துகின்றனர்.

(தொடர்ச்சி பக்கம் 10 இல்)

நன்றி - நூலகத்திட்டம்

(பக்கம் 09 இன் தொடர்ச்சி)

# நெஞ்சு பொறுக்குதில்லையே!...

மான மக்கள் அதே 'சிங்கள பௌத்த' மக்களாவர். 1988 நெருக்கடியில் ஜே.வி.பி. கிளர்ச்சியாளர்கள் என்று சொல்லப்பட்ட அதே 'சிங்கள பௌத்த' மக்களின் எண்ணிக்கை அறுபதாயிரத்துக்கும் அதிகமாகும். எனவேதான் 'சிங்கள பௌத்த' ஆண்ட பரம்பரையினர் மத்தியில் இனத்தின் பேரால், மதத்தின் பேரால் 'திமிர்' வெளிப்படுகிறதே தவிர சிங்கள இனப்பற்றோ, பௌத்த மதப்பற்றோ கிடையாது என்பதே இக்கொடூர நிகழ்வுகள் மூலம் நாம் பெறக்கூடிய உண்மைத் தரிசனமாகும். எனவேதான் இவர்கள் யார்?

நிலமானிய - பழமைச் சிந்தனையும் -சொத்துமுடைய 'சிங்கள பௌத்த' ஆண்டகைகள் யார்?

கொழும்பில் கொலுவீற்றிருக்கும் இந்த ஆண்டபரம்பரையினரின் குணாதிசயங்கள் எவை? இவர்களுடைய நண்பர்கள் யார்? இவர்களுடைய விரோதிகள் யார்? இந்த ஆண்டகைகளின் ஆணிவேர் சொத்துடைய வர்க்கத்தின் ஆழத்தில் வேரூன்றியுள்ளது. எனவேதான் பிரிட்டிஷ் எசமானர்களின் தயவில் வாழ்ந்தவர்கள். இப்போது அமெரிக்க ஏகாதிபத்திய எசமானர்களின் எடுபிடிகளாகச் செயற்பட்டு வருகின்றனர். பல்தேசியக் கம்பனிகளிடம் பேரம் பேசும் ஊழல் பேர்வழிகளாக உருமாறியுள்ளனர். இதனால்தான் 'ரெலிகொம்' நிறுவனத்தை பல்தேசியக் கொம்பனிக்குக் கொடுப்பதற்கு உடன்படிக்கை செய்ய முனைந்த வேளை 'சிங்கள பௌத்த' தொழிலாளர்கள், வேலை நிறுத்தம் செய்த போது 'ஒப்பரேசன் சொக்' நடாத்தி புலிகளுக்கு ஆதரவு வழங்கும் நடவடிக்கை எனப்பிரகடனப்படுத்தி இராணுவத் துப்பாக்கி முனையில் வேலைநிறுத்தம் ஒடுக்கப்பட்டது.

புத்தளம் சீமெந்து ஊழல் விவகாரம் கிடப்பில் போடப்பட்டுள்ளது. கொட்டகல பெருந்தோட்டத் தனியார் மயல் விவகாரம் அம்பலத்துக்கு வரத் தொடங்கியுள்ளது. கற்பிட்டி அனல்மின்சார நிலையம், புத்தளம் அமெரிக்க வானொலி நிலையம் அமைப்பதற்கு இந்த ஆண்ட பரம்பரையினர் அவதிப்படுவதேன்?

எனவேதான் இவர்கள் யார் என்ற கேள்வி உரத்து எழுகிறது. அமெரிக்க, நவகாலனித்துவ, பல்தேசியக் கம்பனி முதலைகளின் உள்ளூர்த் தாசர்கள் தான் இந்த 'சிங்கள பௌத்த' ஆண்டகைகள் என்பது வெளிப்படுகிறது. இந்தத் திருக்கூட்டத்தினருக்கு நீலன், கதிர்காமர் தமிழர்கள் என்பதோ, கிறிஸ்தவர்கள் என்பதிலோ பிரச்சினை கிடையாது. சர்வதேசிய ரீதியில் அமெரிக்க ஏகாதிபத்திய தாசர்கள் என்பதில் அனைவரும் சங்கமமாகி விடுகின்றனர்.

அமெரிக்கா இப்போது அடிக்கடி இலங்கைத்தமிழர் பிரச்சினையில் அக்கறை காட்டுகிறது. தமிழ் 'பயங்கரவாதத்தை' கண்டிப்பதிலும் மனித - ஜனநாயக உரிமைகளிலும் அதிக கரிசினை காட்டுகிறது. ஏன் இலங்கை ஆடு நனைகிறது என்று அமெரிக்க ஓநாய் அழுகிறது?

இங்கேதான் நாம் ஆண்டகைகளின் வர்க்க வேர்களின் படர்ச்சியை - தொடர்ச்சியை உறவுகளைத் தேடி ஆராய வேண்டிய ஏற்படுகிறது.

> **சிங்கள இளைஞர் கிளர்ச்சி செய்த போது 'சிங்களப் பயங்கரவாதி'களாக்கப்பட்டனர். தமிழ் இளைஞர்கள் சுயநிர்ணயத்துக்காக ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்ட போது 'தமிழ்ப் பயங்கர வாதிகளாக்கப்பட்டுள்ளனர்.**

முதலாவது ஜனாதிபதியாகத் தனக்குத்தானே முடிசூட்டிக் கொண்ட முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். தன்னை இலங்கையின் 523 -வது மன்னர் (இலக்கம் தவறானது. ஆண்டபரம்பரையினரிடம் தெரிந்து கொள்க) எனப் பிரகடனம் செய்தது ஞாபகம் வருகிறது. பாராளுமன்றத்தை பழைய கோட்டே இராசதானிக்கு மாற்றியதும் நினைத்துப் பார்க்கலாம். யாழ்ப்பாணம் கைப்பற்றிய போது 'சப்புமல் குமரையா' நினைவு கூரப்பட்டார். 1995 ஜூலையுடன் ஒழித்திருக்க வேண்டிய ஜனாதிபதிக்கு புதிதாக ஜெயவர்த்தனபுர இராசதானியில் 1500 மில்லியன் ரூபாவில் மாளிகை அமைக்க முயற்சி நடைபெறுகிறது.

ஐயா, இவர்கள் யார்? கோட்டே புவனேகுபாகு காலத்தில் இலங்கை ஒரு முடியின் கீழ் கோலோச்சப்பட்டது என்று பெருமை பேசுகின்றனர். அதற்குப் பின்னால் என்ன நடந்தது? போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் என அந்நியர் நுழைய அனுமதித்தவர்களும் இந்தக் கோட்டை இராசதானியினர் தான் என்பதை நினைவு கூரலாம். எனவே இன்றைய யாழ்ப்பாணம் கைப்பற்றலுக்குப் பின் எந்த அந்நியர் இங்கு அழைக்கப்படுவார். இந்த ஆண்ட பரம்பரையினர் மீது எனக்கு ஒரு கவிதை நினைவுக்கு வருகிறது.

''இல்லாத ஊருக்கு
நாளை புறப்பட்டு
நேற்றுப் போய்ச்சேர
இருளின் துணையால்
வழிகாட்டு என்றெனைக்கேட்டாய்.
ஏலாது என்றேன்.
'எதிரி' என்று ஏசிவிட்டுப் போனாய்.
போகும் இடந்தெரிதல்
காலந்தெரிதல், வகைதெரிதல்
இவையாவும் முக்கியமல்ல
போதல் ஒன்றே முக்கியமென்றாய்
கீதை மொழி என்றாய்'

இதுதான் இவர்களின் குரல். இவர்களின் ஓட்டத்துக்கு உதவாதவர்கள் 'எதிரி'கள் ஆக்கப்படுவார்கள். இவர்களது கீதை மொழியாகிய 'சமாதானப் போர்' மீது அக்கறை கொள்ளாதவர்கள் 'எதிரி'கள் ஆக்கப்படுவார்கள். சிங்கள பௌத்த நாடு என்று யாப்பில் சொன்னாலும் அது இல்லாத ஊராகும். ஐ.நா. சாசனத்தில் 'சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட்டு ஐம்பது ஆண்டுகள் கடந்த பிறகு அதாவது 20 ம் நூற்றாண்டில் புறப்பட்டு நேற்றைய கி.பி. 14 ம் நூற்றாண்டில் புவனேகுபாகு காலத்துக்குப் போய் சேர 'இருள்' கொண்ட நிலமானிய - நவகாலனித்துவ பாதையால் கீதை மொழியாகியது. ''சமாதானப் போருக்கான வழி கேட்கிறாயே நீ யாரப்பா? நான் அகல்கிறேன். வழி விடப்பா என்றால் 'பயங்கரவாதி' என 'எதிரி' முத்திரை குத்துகிறாய்.

ஆக, சிங்கள இள்ளஞர் கிளர்ச்சி செய்த போது 'சிங்களப் பயங்கரவாதி'களாக்கப்பட்டனர். தமிழ் இளைஞர்கள் சுயநிர்ணயத்துக்காக ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்ட போது 'தமிழ்ப் பயங்கரவாதிகளாக்கப்பட்டுள்ளனர்.

இலங்கையின் இந்த நூற்றாண்டின் மன்னராகிய ஜே.ஆர். பயங்கரவாதத் தடைச்சட்டத்தை உருவாக்கிய பின் செய்த வீர முழக்கம் ஞாபகத்து வருகிறது. ''1979 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ம் திகதிக்கு முன்னர் பயங்கரவாதத்தை முடித்துவிடுவேன்' என்று பிரகடனம் செய்து வீரதுங்க என்ற இராணுவ அதிகாரியை யாழ்ப்பாணம் அனுப்பி வைத்தார். கண்டி யாத்திரை புகழ் ஜே.ஆர். 1977 கலவரத்தின் சற்றுமுன்' போர் என்றால் போர் சமாதானம் என்றால் சமாதானம்' என்றவர் 1983 கலவரத்தை முடித்துவைத்து 'சிங்கள தேசியத்தின் எழுச்சி' என்று அமைதி கண்டார். கடைசிக் காலத்தில் தனது அணியைச் சார்ந்த தலைவர்களைப் பறிகொடுத்த உத்தமனார் உதிர்த்த மொழி 'பயங்கர வாதத்துடன் வாழப் பழகிக் கொள்வோம்' என்பதாகும்.

இவற்றில் இருந்து நாம் தெளிவது என்ன? அரச பயங்கரவாதத்தை பேரினவாத அரசு ஒருபோதும் கைவிட இயலாது என்பதே. எனவேதான்,

1) அவசர காலச் சட்டத்தை ஆயுட் காலச் சட்டமாக அங்கீகரிப்பதும்;
2) யுத்தத்தை ஓயவிடமால் 'சிங்கள பௌத்த' பேரினவெறியுடன் தொடர்ந்து முன்னெடுப்பதும்;
3) சிங்கள இளைஞர்களினதும் ஆயுதப் போராட்ட உணர்வை தோற்றுவிப்பதும்;
4) தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்டத்தை மேலும் மேலும் வளர்ந்து செல்வதும் தான் இன்றைய யதார்த்தம்.


**புதியபூமி**

**சந்தா விபரம்**

ஒரு வருடம் ரூபா 150/=
ஆறு மாதம் ரூபா 75/=
தனிப் பிரதி 10/=
வெளிநாடுகளில்
ஒரு வருடம் 25 அமெ.டொலர்
[தபால் செலவு உட்பட]

அனுப்ப வேண்டிய முகவரி
இ.தம்பையா, S-47, 3வது மாடி,
கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட்
கொழும்பு - 11, இலங்கை


# தமிழ் நாட்டுத் கலித்தியம்

வருணாசிரமம் என்கிற சாதியக் கோட்பாடு சில ஆயிரம் ஆண்டுகளாக இந்திய சமுதாய அமைப்பினதும் இந்து மதத்தினதும் ஆதார தளமாக இருந்து வந்துள்ளது. இந்தச் சாதியக் கோட்பாடும் தொழில் அடிப்படையில் இயல்பாகவே எழும் சமூக வேறுபாடுகளும் ஒன்றே அல்ல. இந்திய நிலவுடமைச் சமுதாய முறையில் நீண்ட வரலாற்றில் உயர்சாதியினரது ஆதிக்கத்தை உறுதி செய்யும் விதமாக சமுதாய நீதிக் கோட்பாடுகளும் மதக் கோட்பாடுகளும் உருவாக்கப்பட்டு பேணப்பட்டன. இந்திய ஆரிய சமுதாயத்தின் உருவாக்கத்துடன் உருவான நால்வருண முறையில் உழைக்கும் மக்கள் சூத்திரர் எனப்பட்டனர். இவர்களை விட அதிகளவு கூடுதலான சுரண்டலுக்கும் ஒடுக்குதலுக்கும் உள்ளாகி சமுதாயத்தினின்றும் விலக்கத்தக்கவர்களாகத் தீண்டாமைக் கொடுமைக்கு உட்படுத்தப்பட்டு பஞ்சமர் என்று இழிவாக அழைக்கப்பட்ட மக்கள் இந்திய சமுதாயத்தின் ஐந்திலொரு பங்கினர்.

நிலமான்ய முறையின் சரிவு சாதி ஒடுக்குமுறைக்கும் தீண்டாமைக்கும் முடிவைக் கொண்டு வரவில்லை. இந்திய சுதந்திரத்திற்குத் தலைமை தாங்கிய இந்திய தேசிய காங்கிரஸும் அதன் தலைமையிலிருந்த காந்தியும் இந்து சாதிய அமைப்பை அழிப்பதற்கு ஆயத்தமாக இருக்கவில்லை. அவர்களது சீர்திருத்தக் கொள்கைகள் உயர் சாதியினரதும் தேசிய முதலாளிகளதும் நிலவுடமையாளர்களதும் நலன்களைப் பேணும் நோக்கிலேயே அமைந்தன. ஒடுக்கப்பட்ட உழைக்கும் மக்களதும் குறிப்பாக அவர்களின் முக்கியமான ஒரு பகுதியினரான தாழ்த்தப்பட்ட சாதியினரதும் நலன்கட்கான குரல்கள் காலத்துக்குக் காலம் எழுந்தன. இடதுசாரிகளும் அம்பேத்கரும் சுயமரியாதை இயக்கத்தினரும் இவற்றுக்கு உரியவர்கள்.

சாதியத்திற்கு எதிரான போராட்டங்களின் தன்மை இந்தியாவின் மாநிலத்துக்கு மாநிலம் வேறுபட்டுள்ளது. அம்பேத்கர் பிறந்த மாநிலமான மகாராஷ்டிரத்தில் தாழ்த்தப்பட்ட மக்களது உரிமைக்கான போராட்டங்கள் மற்ற பல மாநிலங்களை விட பலமானதாக இருந்தன. சாதியத்தின் கொடுமை தளராமல் உள்ள பிரதேசங்கள் இன்னமும் வட் இந்தியாவில் உள்ளன. தாழ்த்தப்பட்ட சாதியினர் (அடித்தள நிலையில் உள்ளோர் என்னும் பொருள்படும் 'தலித்' என்ற மராத்தியச் சொல் குறிக்கும் மக்கள்) தமது உரிமைக்காகப் போராடுவதற்காக ஒவ்வொரு மாநிலத்திலும் உள்ள நிலைமைகட்கேற்ப வெவ்வேறு விதமான அமைப்புகளை நாடியிருக்கிறார்கள். இடதுசாரி இயக்கங்கள் வலியனவாக உள்ள பகுதிகளில் தலித் மக்கள் அவற்றுடன் இணைந்து செயற்பட்டுத் தமது உரிமைகளை வென்றெடுக்க முற்பட்டதை நாம் காணலாம். அம்பேத்கர் சாதி முரண்பாட்டை வலியுறுத்தி வர்க்க முரண்பாட்டைப் புறக்கணித்த தன் விளைவாக நன்மை பெற்றது காங்கிரஸ் போன்ற முதலாளித்துவ அமைப்புக்கள் தாம். இடதுசாரிக் கட்சிகளின் பாராளுமன்றவாத அரசியலும் தலித் மக்களது போராட்டங்களை முன்னெடுப்பதினின்று அவற்றைத் தடுத்துள்ளன. ஆயினும் சாதியத்திற்கெதிரான அவர்களது நிலைப்பாடு எப்போதுமே தொடர்ந்து வந்துள்ளது என்பதை நாம் மறக்கலாகாது.

அம்பேத்கருக்கு அடுத்தாற்போல சாதியத்திற்கு எதிராகப் போராடியவர் என்ற பேர் பெரியார் (ஈ.வெ.ரா.) அவர்கட்கு உண்டு. ஆயினும் அவரது மூர்க்கத்தனமான பார்ப்பன விரோதமும் அரசியற் தெளிவீனமும் அவரது தலைமையிலான இயக்கத்தைச் சாதிய ஒடுக்குமுறைக்கு எதிரான ஒரு வலிய முற்போக்கு அரசியல் சக்தியாகாமல் தடுத்துவிட்டன. அவரது வாரிசுகளது அரசியல் சீரழிவின் தொடக்கத்தை சாதியம் பற்றிப் பெரியார் கொண்டிருந்த பார்வையின் குறைபாடுகளில் காணமுடியும்.

இன்று ஒடுக்கப்பட்ட மக்கள் இந்தியாவின் ஒவ்வொரு மாநிலத்திலும் பல்வேறு தளங்களில் போராடுகிறார்கள். மகாராஷ்டிரமும் கன்னட மாநிலமும் குறிப்பிடத்தக்களவில் தலித் மக்களது போராட்ட நடவடிக்கைகளைக் கண்டுள்ளன. இதன் பின்னரே தமிழகத்தில் 'தலித்தியம்' ஒரு கோட்பாடாக விருத்தி பெற்றது. இவ்விடயத்தில் ஈழத்துத் தமிழ் இடதுசாரிகளும் தாழ்த்தப்பட்ட மக்களும் 1960 களிலேயே பெரிய சாதனைகளைச் செய்துள்ளனர் என்பது குறிப்பிட வேண்டியது. சாதியத்திற்கு எதிரான போராட்டத்தை வர்க்கக் கண்ணோட்டத்தில் முன்னெடுத்து அவர்கள் கண்ட வெற்றியின் பாடங்களை ஏனோ நமது தமிழகத்து இடதுசாரிகளும் தலித்தியக் கோட்பாட்டுக்காரர்களும் இன்னும் கற்கவில்லை.

தமிழகத்து அரசியல் மிகவும் கேவலமான நிலையில் உள்ளது பற்றி இங்கு அதிகம் விவரிக்க அவசியம் இல்லை. இந்த அரசியல் சகதியில் கால்வைத்த கட்சிகள் எல்லாமே தம்மை அந்த துர்வாடையில் சிறிதைத் தங்கள் மேனியிலும் கொண்டுள்ளன. இது போதாதற்கு அயல் நாட்டுப் பணம் தன்னார்வக் குழுக்கள் மூலமும் புகுந்து விளையாட ஆரம்பித்துள்ளது. எனவே யாரெல்லாம் ஒன்றுபட வேண்டுமோ அவர்களையெல்லாம் பிளவுபடுத்துகிற காரியங்களே நடக்கின்றன.

சித்தலிங்கய்யாவுடைய 'கன்னட சுயசரிதை போன வருடம் தமிழில் வந்தது. அங்கே தலித்துக்களின் உரிமைப் போராட்டத்தை இடதுசாரி இயக்கத்துடனும் பிற ஒடுக்கப்பட்ட மக்களது போராட்டங்களுடனும் சேர்த்து வலிமைப்படுத்துகிற அக்கறை தெரிகிறது. தமிழ் நாட்டில் தலித்தியம் என்றால் தலித்துக்களால் மட்டும் தலித்துக்களுக்காக மட்டுமே என்ற விதமான ஒரு போக்கு ஊக்குவிக்கப்பட்டு வருகிறது. இதன் நோக்கங்கள் எவை? சாதிய ஒடுக்குமுறையைப் பிற [illegible]

(தொடர்ச்சி பக்கம் [illegible])

நன்றி - நூலகத்திட்டம்



(3ம் பக்கத் தொடர்ச்சி...)

## ஒரு மலையக மாணவனின்..

ருப்பதாகவும், அதனை மற்றைய தோட்டத்து தலைவர்மாரும் ஏற்றுக் கொண்டிருப்பதாகவும், இராசையா மாமா கூறினார்.

திங்கள், பெற்றோர் அனைவரும் பாடசாலையில் கூடியிருந்தார்கள். கண்டியிலிருந்து கல்வி அதிகாரிகள் வந்திருந்தார்கள். பெற்றோர் ஆசிரியர் மற்றும் கல்வியதிகாரிகள் கூட்டம் மாலை 3 மணி வரை நடைபெற்றதாக அம்மா கூறினார். 12 மணியுடன் எங்களை வீடு செல்லும்படி கூறினார்கள். நம்ம தமிழ் கல்வியதிகாரிகள் சிலர் கூட சுப்பிரமணி, கணக்கு சேர் ஆகியோருக்கு 'சப்போட்டாக' பேசியதாகவும் அம்மா கூறினார்.

கல்வி முகாமைத்துவ பட்டம் பெற்ற ஆறுமுகசாமிதான் அதிபராக நியமிக்கப்பட்டுள்ளதாகவும் தொழிற்சங்கங்கள் அனாவசியமாக பாடசாலை விவகாரங்களில் தலையிடக் கூடாது என்பதை பெரிய கல்வியதிகாரிகளும், பெற்றோரும் ஆசிரியரும் கூட்டாக ஏற்றுக் கொண்டதாகவும், இராசையா மாமாவும், அம்மாவும் சந்தோசமாக கூறினார்கள்.

செவ்வாய் பாடசாலை சென்ற போது கணக்கு சேர், சுப்பிரமணி சேர் மாணவரை தூண்டிவிட்டது பிழையானது என்று கூறி அவர்களை வேறு இடத்துக்கு மாற்றி விட்டதாக அறிந்தேன். ''இவர்கள் போற பாடசாலை மாணவர்கள் பாவம் செய்தவர்கள். என்ன பாடு படப்போகிறார்களோ தெரியாது என்று டில்சான் ஜோக்காக கூறி சிரித்தான். எனக்கு என்னவோ சிரிப்பு வரவில்லை. புதன், வியாழன், வெள்ளி வாசிப்பு பாடமும் வரைதலும் இடம் பெற்றது. வியாழன் சாயிபாபா பஜனை இடம் பெற்றது.

(3ம் பக்கத் தொடர்ச்சி...)

## ஒரு கடிதம்...

நடைபெற்றது. வேலைநிறுத்தம் காரணமாக அட்வான்ஸ் கொடுக்கப்படவில்லை. ஆளுகளுக்கு சரியான கஸ்டம். இருந்தாலும் விடாப்பிடியாக இந்த ஸ்ரைக்கை நடத்திக் காட்டியிருக்கிறார்கள். ''எங்கள் 'சங்கத்தில் முழுபேரும் சேர்ந்தால் பிரச்சினையை தீர்த்துத் தருவோம்' என ஒரு முக்கிய தொழிற்சங்கத் தலைவர் கூறியிருக்கிறார். இந்த வெத்து வேட்டுக் கெல்லாம் அவர்கள் பலவீனமடைந்து விடவில்லை.

இந்த மாதிரி ஸ்ரைக்' எல்லாம் தனித்தனியாக தோட்டவாரியாகத்தான் நடைபெறுகின்றது. இதனால் தோட்டத் தொழிலாளரின் உண்மையான பலத்தை காட்ட முடியாமல் போய் விடுகின்றது. முந்தியெல்லாம் குறித்த ஒன்றி இரண்டு கோரிக்கையை முன்வைத்து மலையகம் முழுக்க ஸ்ரைக் நடக்கும். நம்ம கிழட்டுத்தலைமைகள் காட்டிக் கொடுப்பு செய்தாலும், மக்கள் உறுதியுடன் இருந்தார்கள். இப்போது அப்படியல்ல. 22 கொம்பனிக்கெதிராக தனித் தனியான போராட்டங்கள் தான் நடைபெறுகின்றது.

உங்கள் பகுதியிலும் பல ஸ்ரைக்குகள் நடைபெறுவதாக எழுதியிருந்தாய். கூடுமானவரை அந்த போராட்டங்களை ஆதரிக்கவும், கூடிய விரைவில் பதுளைக்கு வருவேன். பெரிய சாமியின் மகனை பொய் குற்றச்சாட்டுச் சொல்லி அடைந்து வைத்துள்ளார்கள். அவனை பாக்க வரும் போது லெஜர்வத்தைக்கும் வருகின்றேன்.

நீ எழுதியபடி, முழு மலையக மக்களையும் ஒற்றுமைப்படுத்தும் அமைப்பொன்று தேவைதான். அதுபற்றி அடுத்த கடிதத்தில் விரிவாக யோசித்து எழுகின்றேன்.

எங்கள் தோட்டத்திலும் தொழிற்சங்க வேறுபாடில்லாமல் ஸ்ரைக் நடைபெறுகின்றது. ஸ்ரைக் அமைப்புக்குழு' என்ற ஒரு அமைப்பை ஏற்படுத்தியுள்ளோம்' எல்லா தொழிற்சங்க தலைவர்களும் அரசியலமைப்புகளின் தலைவர்களும் முன்னணிகளின் தலைவர்களும், மற்றும் சேர்மார்களும் இதில் அங்கம் வகிக்கின்றனர். ஒரு அரசசார்பற்ற அமைப்பு எங்கள் போராட்டத்தை ஆதரித்து, அரிசி, சீனியெல்லாம் கொண்டு வந்து கொடுத்தார்கள். ஆளுகளுக்கு உற்சாகமாக இருந்தது.

கோரிக்கை வெற்றி பெறும்வரை வேலை நிறுத்தம் நடைபெறும். முடிந்தால் இங்கு வந்து போகவும்.

வீட்டில் அனைவரையும் கேட்டதாகக் கூறவும்.

உடன் பதில் போடவும்

இங்ஙனம்
அன்பு மச்சான்
எஸ்.இலட்சுமணன்

(1ம் பக்கத் தொடர்ச்சி...)

## தனிநபர் அரசியல் .....

தாகும். தனிநபர் அரசியல் படுகொலைகளுக்காக புலிகள் இயக்கத்தைக் கடுமையாகக் கண்டிக்கும் அறிக்கைகளை சில கட்சியினர் வெளியிட்டு இருந்தனர். அதேவேளை தமது கடந்த கால நிகழ்கால தனிநபர் அரசியல் படுகொலைகளால் ஏற்பட்ட கறைகளையும் களங்கங்களையும் துடைத் தெறிவதற்கு எவரும் முன்வரவில்லை. ஐக்கிய தேசியக் கட்சியினராயினும் அல்லது தமிழர் தரப்பினராயினும், ஜே.வி.பி இயக்கமாயினும் முஸ்லீம் தீவிரவாத சக்திகளாயினும் தத்தமது சுய விமர்சனத்தை முன்வைத்து நாட்டு மக்களிடையே தமது தவறான செயலுக்கான வருத்தத்தையும் மன்னிப்பையும் கேட்டிருக்க வேண்டும். அப்படிச் செய்தால் மட்டுமே எத்தகைய அரசியல் படுகொலைகளையும் கண்டிப்பதற்கும் எதிர்ப்பதற்கும் உரிய தகுதி அருகதை எவருக்கும் இருக்க முடியும்.

இலங்கையின் தனிநபர் அரசியல் படுகொலைக் களத்தில் விடுதலைப் புலிகள் இயக்கம் ஒரு பகுதி என்பது மறைப்பதற்குரிய ஒன்றல்ல. ஆனால் ஏனைய பகுதியினர் பிரிவினர் எல்லோரும் புலிகள் இயக்கத்தை மட்டும் பழி சொல்லி விட்டுத் தம்மை ஜனநாயகவாதிகளாகவும் மனித உரிமைப் பற்றாளர்களாகவும் காட்டி நாட்டையும் மக்களையும் ஏமாற்றி விட முடியாது. ஏனெனில் இவர்கள் அத்தனை பேரும் புரிந்த படுபாதகக் கொலைகளை இழப்பிற்குள்ளான ஒவ்வொரு குடும்பத்தினரும் உறவினரும் அயலவர்களும் மக்களும் தமது நினைவில் என்றும் வைத்திருக்கிறார்கள். எனவே நாம் செய்தால் முற்றிலும் சரியானது தேவையானது மற்றவர்கள் செய்தால் அநீதியானது அக்கிரமமானது என்ற அடிப்படையில் மேற்கொள்ளப்படும் தனிநபர் அரசியல் படுகொலை வக்கிரப்போக்கு சகல தரப்பிலும் நிறுத்தப்பட வேண்டும். வாய்மூலக் கண்டிப்பாக அன்றி மனச்சாட்சி மிகுந்த சுயவிமர்சனம் செயல்பூர்வமானதாக அமைய வேண்டும்.

மேலும் தனிநபர் அரசியல் படுகொலைகளை வெறும் கண்டனங்களினாலோ அன்றி போதனைகளாலோ அல்லது சட்டங்களினாலோ தடுத்து நிறுத்த முடியாது. இத் தனிநபர் அரசியல் படுகொலைகள் தொடர்வதற்குக் காரணமான தேசிய இனப் பிரச்சினையும் ஏனைய சமூக அரசியல் பிரச்சினைகளுக்கும் குறைந்த பட்சத்தீர்வு பேச்சுவார்த்தை மூலமான புரிந்துணர்வு விட்டுக் கொடுப்பு என்பனவற்றை முன்வைத்து பேரினவாதப் போக்கு அற்ற வகையில் நியாயமான தீர்வு விரைந்து தேடப்பட வேண்டும். ஜனநாயக பூர்வமான சமாதான வழிமுறைகளைப் பின்பற்றாது முற்றிலும் அதிகாரத்தையும் ஆயுதப்படைகளையும் கொண்டு பேரினவாத வெறிப் போக்கை முன்தள்ளிச் செயல்பட்டால் தனிநபர் அரசியல் படுகொலைகள் மேன் மேலும் தொடரவே செய்யும். எனவே தனிநபர் அரசியல் படுகொலைக் கலாசாரத்தை முற்றாகத் தடுத்து நிறுத்தக்கூடிய பொறுப்பும் கடமையும் அரசாங்கத்திற்கே உண்டு. அவற்றை அரசாங்கம் உரியவாறு முன்னெடுத்து செயல்படுத்துமோ என்பதே இன்றுள்ள கேள்வியாகும்.

(4ம் பக்கத் தொடர்ச்சி...)

## யூலையின் துயர நினைவுகள்

இனவன்செயலை தனது ஆரம்பப் பள்ளியாக்கிக் கொண்டது. அது மட்டுமன்றி இனப்பிரச்சினை சார்பான இன்றைய யுத்தத்திற்கான ஒரு பாரிய திருப்புமுனையாகவும் அது அமைந்து கொண்டது.

1983 இன் கறுப்பு யூலை தோற்றுவித்த இனப்பகைமையும் பேரினவாத வெறியும் ராணுவ ஒடுக்கு முறையாக மேன்மேலும் வளர்க்கப்பட்டது. அதேவேளை அதன் எதிர் விளைவாக தீவிரவாத இளைஞர் ஆயுதப் போராட்டங்களும் வளர்ச்சி கண்டன. தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் படிப்படியாக வளர்ச்சி பெற்று இராணுவ வல்லமையுடன் கொரில்லா இயக்கமாகப் பலம் பெற்றது. அத்துடன் ஏனைய இயக்கங்களை போராட்டக் களத்தில் இருந்தும் தமிழர் பிரதேசங்களில் இருந்தும் அப்புறப் படுத்தியும் அழித்துவிடும் முயற்சிகளிலும் ஈடுபட்டது. அதேவேளை இந்திய மேலாதிக்க சக்திகளின் கட்டுப்பாட்டிற்குள் நின்று கொள்வதையும் அவ் இயக்கம் ஏற்றுக் கொள்வதாக இல்லை.

இத்தகைய சூழலிலேயே மற்றொரு முக்கியத்துவம் மிக்க யூலை நிகழ்வு இடம் பெற்றது. அதுவே 1987 ன் யூலை 29 ம் திகதி இலங்கை இந்திய ஒப்பந்தம் கொழும்பில் வைத்து ஜே.ஆர். - ராஜீவ் ஆகியோரால் கைச்சாத்திடப்பட்டமையாகும். இவ் ஒப்பந்தம் வெறுமனே இனப்பிரச்சினையின் தீர்வுக்கு உரிய ஒன்றுமன்டுமன்றி அதனை அமுல்படுத்துவதற்கான ராணுவ ஒப்பந்தமாகவும் அமைந்திருந்தது. இவ் ஒப்பந்தம் கையொப்பமிட்ட ஒரு மணி நேரத்தில் இலங்கையின் வடபுல மண்ணிலே இந்தியப் படைகள் சமாதானப் படை என்னும் பெயரில் தரையிறக்கப்பட்டன.

இலங்கை இந்திய ஒப்பந்தமும் அதன் மூலமான இந்தியப் படைகளின் வரவும் இலங்கையில் பல்வேறு நிலைகளிலும் தாக்கங்களையும் எதிர் விளைவுகளையும் ஏற்படுத்தின. வடக்கு கிழக்கில் தமிழர்களிடையே ஆரம்ப ஆதரவைப் பெற்ற போதிலும் ஒக்டோபர் பத்தில் இந்தியப் படைகள் ஆரம்பித்த தாக்குதல்கள் அதன் சுயரூபத்தை வெளிக்காட்டின. சமாதானத்திற்கான படையெனக் கூறப்பட்ட இந்தியப் படையினர் தமிழ் மக்களை தாக்கி அழிக்கும் படையாகியது.

இலங்கையின் தமிழ் அரசியல் தலைவர்கள் எப்பொழுதும் தமிழ் மக்களுக்கு கூறி வந்தது போன்று இந்தியா இலங்கைத் தமிழர்களின் தாய்நாடும் அல்ல இந்தியப் படைகள் இலங்கைத் தமிழர்களின் இரட்சகர்களும் இல்லை என்பதை இந்தியப் படைகள் அக்காலகட்டத்தில் நிரூபித்து தம்மை அந்நியப்படைகள் என நிலை நாட்டிக் கொண்டன. தமிழ் மக்களைக் கொலை செய்தும், கைது சித்திரவதை செய்தும் பெண்களைப் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கியும் அனர்த்தங்கள் புரிந்தன. தாங்கள் ஒரு வலிமை மிக்க பிராந்திய வல்லரசின் மேலாதிக்கப்படைகள் என்பதை வெளிக்காட்டிக் கொண்டன. மாகாணசபைகள் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்பதை விட 87' யூலை ஒப்பந்தம் இலங்கைத் தமிழர்களுக்கு ராணுவ ரீதியில் பலத்த அடியாகவே அமைந்தது. இதவை வடக்கு கிழக்கின் தமிழ் மக்கள் நடைமுறை வாழ்வில் அனுபவித்துக் கொண்டனர்.

இவ்வாறு கடந்த இரண்டு தசாப்தங்களில் 8ம், 83 ம், 87 ம் ஆண்டு யூலைகளில் இடம்பெற்ற மூன்று முக்கிய நிகழ்வுகள் இலங்கை அரசியலில் வர்க்க இனரீதியில் தமிழ் சிங்கள முஸ்லிம் மலையக மக்கள் அனைவருக்குமே துயரங்களையும் ஆழமான வடுக்களையும் ஏற்படுத்தியவைகளாகும்.

(10ம் பக்கத் தொடர்ச்சி...)

## தமிழ் நாட்டுத் தலித்தியம்

மாக, தலித்துக்களது தலைமையை தங்களது கைகளுக்குள் தக்கவைத்து தமது தனிப்பட்ட நலன்களைப் பேணுவதும் சிலரது தேவையாக உள்ளது. இதை நியாயப் படுத்த தங்கள் புலமையைக் காட்டும் முறையில் அமைப்பியல், பின் அமைப்பியல், பின் நவீனத்துவம் என்ற விதமாக அரைவேக்காட்டு விளக்கங்களையும் இவர்கள் முன்வைக்கிறார்கள்.

மேற்கூறிய போக்கினால் நன்மை அடைவது யார்? நிச்சயமாக ஒடுக்கப்பட்ட எந்த மக்களுமல்ல. இவ்வாறான போக்குகள் தனிநபர்வாதமும் குழுவாதமும் ஓங்க உதவுகின்றன. சாதி அடிப்படையில் ஒடுக்கப்பட்ட மக்கள் தம்முள் சாதி வேறுபாடுகளின் பேரால் மோதுகிற ஆபத்தையும் இந்தவிதமான அரசியல் ஊக்குவிக்கிறது.

சாதியத்தினால் மிகவும் பாதிக்கப்பட்ட மக்கள் அதற்கெதிராக ஒடுக்கப்பட்ட மக்கள் என்ற வகையில் ஒன்றுபடுவதும் தமது உரிமைகட்காகப் போராடுவதும் முற்றிலும் சரியானது. அதற்கு ஆதரவு தருவது மட்டுமல்லாமல் அதில் பங்குபற்றுவதும் ஒவ்வெரு முற்போக்குவாதியினதும் முற்போக்கான அரசியற் கட்சியினதும் பொறுப்பாகும்.

சாதியத்தின் கொடுமைகட்கெதிராகவும் அதன் பாதிப்புக்கு உட்பட்ட மக்கள் தமது கடந்தகால இழப்புக்கட்கு நட்ட ஈடாக விசேட வசதிகளைக் கோரியும் நடக்கும் போராட்டங்களில் வர்க்கக் கண்ணோட்டமும் வலியுறுத்தப்பட வேண்டும். அதே வேளை, இப் போராட்டங்களின் குறைபாடுகள் எத்தன்மையானவையாக இருந்தாலும் அவற்றின் நியாயம் ஏற்கப்பட்டு அதன் வெகுஜனப் பண்பு ஊக்குவிக்கப்பட வேண்டும்.

சாதி ஒடுக்குமுறை போலவே நிறம், பால், தேசம், மொழி, மதம் போன்ற அடிப்படைகளிலும் ஒடுக்குமுறை நிலவுகிறது. தேசிய விடுதலை, பெண்விடுதலை போன்ற இயக்கங்களிற் பல. தம்மைப் பிற விடுதலைப் போராட்டங்களினின்று தனிமைப்படுத்திப் பிற்போக்கு சக்திகளுடன் தம்மை ஐக்கியப் படுத்தியுள்ளதை நாம் அறிவோம். தமிழ் நாட்டுக்குரிய அரசியற் கோமாளித்தனங்கள் போலவே தலித்தியமும் பிற மாநிலங்களின் முற்போக்கான அரசியற் பண்புகளை நிராகரித்து வளரும் ஆபத்து உள்ளது. ஆயினும் சாதிய ஒடுக்குமுறைக்கு உட்பட்ட மக்களது உண்மையான உரிமைப் போராட்டங்கள் விருத்தி பெறும் போது தலித்துக்கள் தமது உண்மையான நண்பர்களை அறிந்து கொள்வார்கள். தமிழகத்துத் தலித்தியவாதிகளது போக்கு அவர்களை இந்தியாவின் பிற மாநிலங்களின் தலித் உரிமைப் போராளிகளிடமிருந்து தனிமைப் படுத்துவதற்கான சான்றுகள் ஏற்கனவே தெரிகின்றது. தலித்துக்களது உரிமைக்கான நல்ல போராட்ட சக்திகள் வளர்வதன் மூலம் தமிழகத்திலும் இந்தியாவின் பிற மாநிலங்களிலும் உள்ள தலித்துக்களதும் பிற உழைக்கும் மக்களது நலன்கள் பேணப் படும்.

**இ.தி.கோணாமலை**

நன்றி - நூலகத்திட்டம்


# புதிய பூமி

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

PUTHIYAPOOMI


சோமசிறியை இழந்ததனால் அவரின் குடும்பம் சாப்பிட வழியில்லாமல் கஷ்டப்படுகிறது. அதனால் அவரின் மனைவி கசிப்பு விற்கும் நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளார். கிறிஸ்தோபர் திசேரா என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தை நிரந்தர முடமானதால் அவரின் குடும்ப் பெரிய கஷ்டத்தை அனுபவிக்கின்றது. அவரை ராகமை வைத்திய சாலைக் கிளினிக்கிற்கு கொண்டு வரமுடியாது கஷ்டப்படுகிறது அவரது குடும்பம்.

வுள்ள இடத்தில் குடியிருப்பவர்களில் பெரும்பாலானோர் 1970 - 77 கால கட்டத்தில் அரசாங்கத்தால் குடியேற்றப்பட்டவர்களாவர். அவர்களில் ஒருவரே சோமசிறி.

அதுமட்டுமல்ல சோமசிறி என்பவர் கடந்த பொதுத் தேர்தலின் போது பொது ஜன ஐக்கிய முன்னணியில் போட்டியிட்டு தற்போது எம்.பியாக இருக்கும் யூசுஸ் பீரிஸ்க்கு ஆதரவாக பிரசார வேலைகளில் ஈடுபட்டவராவார்.

## நுரைச்சோலையில் நடந்தது இதுதான்!

இரண்டு பிள்ளைகள் பசியை தாங்கமுடியாது ஒரு கடையிலிருந்து மாங்காய்களை திருடி உண்டிருக்கிறார்கள். அந்தக் கொடுமையை பொறுத்துக் கொள்ள முடியாத தாய் இன்னுமொரு கொடுமையான கசிப்பு விற்பனையில் ஈடுபட்டுள்ளார்.

இந்த குறிப்பிட்ட குடும்பம் நுரைச்சோலையில் இருக்கிறது. நுரைச்சோலையில் அனல் மின்சார நிலையம் அமைப்பதை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்தவர்களில் ஒருவரான சோமசிறி என்ற 45 வயது குடும்பத்தலைவனை பொலிசாரின் துப்பாக்கிச் சூட்டிற்கு பறிகொடுத்த குடும்பத்தின் பிள்ளைகளே பசிக் கொடுமையால் மாங்காய் திருடியுள்ளனர். சோமசிறி என்ற குடும்பத் தலைவன் இல்லாமல் பிள்ளைகளையும் தன்னையும் உயிருடன் வைத்துக் கொள்வதற்காக கசிப்பு விற்பனையில் ஈடுபட்டுள்ளார் சோமசிறியின் மனைவி. இவ் அவலத்தை உருவாக்கிக் கொடுத்துள்ளது இன்றைய ஆட்சியினரே தான்.

புத்தளம் நுரைச்சோலையில் நிலக்கரியை கொண்டு அனல் மின்சார நிலையம் அமைக்கப்படவுள்ளதால் மக்கள் அவர்களின் சொந்த இடங்களிலிருந்து விரட்டியடிக்கப்படவுள்ளனர். அத்துடன் அப்பகுதியில் பாரிய அளவில் சூழல் மாசடையவுள்ளது. இக்காரணங்களினால் அனல் மின்சார நிலையத்தை அமைப்பதை அப்பகுதி மக்கள் எதிர்த்து வருகின்றனர்.

அதனை எதிர்த்து யூன் மாதம் 25 ஆம் திகதி அப்பகுதி மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டோர் மீது பொலிசார் கண்ணீர்ப் புகைப் பிரயோகம் செய்ததுடன் துப்பாக்கிப் பிரயோகமும் செய்துள்ளனர்.

துப்பாக்கிச் சூட்டிற்கு நுரைச்சோலை மரக்கறி சந்தையில் நாட்டாமை வேலை செய்த சோமசிறி என்பவர் இலக்காகி மரணமானார். 42 வயதுடைய கிறிஸ்தோபர் திசேரா என்ற விவசாயி துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி நடக்கமுடியாது நிரந்தரமுடமாகியுள்ளார்.

இதைவிட துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்கான மூன்று இளைஞர்களில் ஒருவரின் நிலைமை மிகவும் கவலைக்கிடமாக இருக்கிறது.

ஆனால் துப்பாக்கிச் சூட்டினால் இறந்தவர்களுக்கோ முடமானவருக்கோ, காயப்பட்டவர்களுக்கோ அரசாங்கம் எவ்வித நட்டஈட்டையும் வழங்குவதாக இல்லை.

அதுமட்டுமல்ல நுரைச்சோலை அனல் மின்சார நிலையத்துக்கு எதிரான அர்ப்பாட்டத்தை அரசாங்கத்திற்கு எதிரான சதியென்று அரசாங்கம் கூறிவருகிறது. அத்துடன் கொல்லப்பட்ட சோமசிறி நுரைச்சோலையை சேர்ந்தவரல்ல என்றும் அவர் அப்பாவியல்ல என்றும் பிரதிபாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை குறிப்பிட்டுள்ளார்.

நுரைச்சோலையில் அனல் மின் சார நிலையம் அமைக்கப்பட

இப்படிப்பட்ட சோமசிறியை நுரைச்சோலையில் வசிப்பவரல்ல என்றும் அவர் அப்பாவியல்ல என்றும் கூறப்படுவது ஏன்?

நுரைச்சோலை அனல்மின்சார நிலையத்தை அமைப்பதில் அரசாங்கம் விடாப்பிடியாக இருப்பதாகத் தெரிகிறது. அதனால் அதற்கு எதிர்ப்பு தெரிவிப்பவர்களை அரசாங்கத்திற்கு எதிராக சதியிலீடுபவர்களாக காட்ட முனைகிறது. அதனடிப்படையில் துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தை நியாயப்படுத்தவும், பார்க்கிறது. பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கவும் நட்டஈடு வழங்கவும் அரசாங்கம் தயாராக இல்லை என்பதையுமே காட்டுகிறது.

## பெனாசீர் பூட்டோவின் கருத்துக்கள் உண்மை நிலையைப் புட்டுக் காட்டியுள்ளது.

பாகிஸ்தான் எதிர்கட்சித் தலைவியும் முன்னாள் பிரதமருமான பெனாசீர் பூட்டோ அண்மையில் இலங்கை வந்திருந்தார். அனுரா பண்டார நாயக்காவின் இருப்து வருட அரசியல் பூர்த்தி விழாவில் பங்கு கொள்ளவே வந்தார். அனுரா பண்டார நாயக்கா அரசியலில் கடந்த இருபது ஆண்டுகளாக எத்தகைய கொள்கையைப் பின்பற்றி வந்தார். அவரது சாதனைகள் என்ன? அவரது தனிப்பட்ட அரசியல் வாழ்க்கை எத்தகையது என்பவை பற்றி இங்கு ஆராய அவசியம் இல்லை. அவர் ஏன் சுதந்திரக் கட்சிக்குள் இருக்க முடியாது ஐக்கிய தேசியக் கட்சிக்குள் புகுந்து கொண்டார் என்பதும் அவரது அரசியல் தலைமைத்துவ எதிர்பார்ப்பின் ஓர் அங்கமே இருபது வருட அரசியல் பூர்த்தி விழா என்பதும் வேறு விடயங்கள்.

இங்கு சுட்டிக் காட்ட விரும்புவது இத்தகைய ஒரு விழாவுக்கு பங்கு கொள்ள வந்த பெனாசீர் பூட்டோ முன்வைத்த கருத்துக்களின் கனதியையேயாகும். பெனாசீர் தான் ஒரு பெண் என்பதில் பெருமையும் மகிழ்ச்சியும் அடைவதாகக் கூறியுள்ளமை பெண் சமத்துவமும் பெண்ணுரிமையும் அதிக அழுத்தம் பெற்று வரும் இன்றைய சூழலில் முக்கியத்துவமுடையதாகும். அவர் பாகிஸ்தானின் ராணுவ சர்வாதிகாரப் பிடியைத் தளர்த்தும் பாராளுமன்ற ஜனநாயகத்திற்காகப் போராடிய பெருமையுடையவர். தந்தையை தூக்கு மேடையில் இழந்தவர். சகோதரர்களை கொலைக் களத்தில் பறிகொடுத்தவர். சிறை, தடுப்புக்காவல், கொலை முயற்சிகள், அச்சுறுத்தல், அவப்பெயர் போன்ற துன்பங்களை அனுபவித்தவர். அவருக்கு அபூர்வமான அரசியல் போராட்ட முத்திரை ஒன்று உண்டு. இருப்பினும் அவர் அதிகாரத்தில் இருந்த வேளை அதிகார துஷ்பிரயோகம், ஊழல், ஜனநாயக விரோத செயல்பாடு, மறைமுகக் கொலைகள் என்ற குற்றச்சாட்டுகளுக்கும் உள்ளானவர் என்ற பக்கமும் உண்டு. அவற்றின் உண்மை பொய்களை பாகிஸ்தான் மக்கள் தான் தீர்வு கூற வேண்டியவர்கள்.

இலங்கையில் பெனாசீர் ஆற்றிய உரைகளில் தென் ஆசிய நாடுகள் மட்டுமன்றி முழு மூன்றாம் உலக நாடுகள் எதிர்நோக்கும் சில அடிப்படையான யதார்த்தங்களைச் சுட்டிக் காட்டினார். ஒன்று வளர்ச்சி பெற்ற முதலாளித்துவ நாடுகள், வளரும் மூன்றாம் உலக நாடுகளின் மீது வர்த்தக யுத்தத்தின் மூலம் ஆதிக்கம் செலுத்தி நசுக்கி வருவதை வெளிப்படையாகவே எடுத்துக் கூறினார். இரண்டாவது உலக வங்கியும் சர்வதேச நாணய நிதியம் போன்றன மூன்றாம் உலக நாடுகளின் மீது புரிந்து வரும் சதிகளையும் சண்டாளத் தனங்களையும் சுட்டிக் காட்டினார். எவ்வாறு கடன் உதவி என்ற பெயரில் அவை செய்து வரும் தகடு தத்தங்களையும் கண்டனம் செய்தார். மூன்றாவது



இவற்றுக்கு எதிராகக் குறிப்பாக தென் ஆசிய நாடுகள் மிகுந்த பொறுப்புணர்வுடனும் புரிந்துணர்வுடனும் ஐக்கியப்பட்டு தமது நாடுகளினதும் பிராந்தியத்தினதும் பொருளாதாரங்களை மேம்படுத்திப் பாதுகாக்க வேண்டும் என்பதையும் அவர் வற்புறுத்தத் தவறவில்லை. நான்காவதாக பாகிஸ்தானின் ஜனநாயக அரசியல் அனுபவங்களை எடுத்துக் கூறியதுடன் சமஷ்டி அமைப்பு முறை பற்றியும் அதன் கீழான மாநில ஆட்சியமைப்பு முறைபற்றியும் எடுத்துக் கூறி உள்ளார்.

எவ்வாறு இருந்த போதிலும் பெனாசீர் தனது அரசியல் அனுபவத்தின் ஊடே வெளியிட்ட மேற்படி கருத்துக்கள் மிகவும் கவனத்திற்குரிய கனதியானவை என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. அவர் தெளிவாகக் கூறிய மேற்படி கருத்துக்கள் அவரை விருந்தினராக அழைத்த அனுரா பண்டாரநாயக்காவுக்கு ஒத்து வராதவை என்பது வெளிப்படை. ஏனெனில் அனுரா நேரடியான அமெரிக்காவினதும், மேற்குலகத்தினதும் நம்பிக்கைக்குரிய விசுவாசி என்பது இரகசியம் அல்ல. அனுராவுக்கு மட்டுமல்ல இன்று அமெரிக்காவின் வழிகாட்டலில் பயபக்தியோடு ஆட்சி அதிகாரத்தை நடாத்தி வரும் அரசாங்கத் தலைவர்களுக்கும் பெனாசீரின் கருத்துக்கள் ஏற்புடையவையாக இருக்க மாட்டாது.

ஒருவேளை எதிர்க்கட்சியில் இருப்பதால் பெனாசீர் இவ்வளவு அப்பட்டமாகப் பேசி இருக்கலாம். அவரது ஆட்சிக் காலத்தில் எப்படி நடந்து கொண்டார் எனவும் கேட்க நியாயம் உண்டு. ஆனால் இன்றைய யதார்த்தத்தை இன்றைய சூழலில் வெளிப்படையாக முன்வைத்தமை வரவேற்கப்பட வேண்டியதாகும். மக்கள் உணர்ந்து கொள்ள விழிப்புணர்ச்சி பெற தமது சக்திகளை வலுப்படுத்த இப்பேச்சு உதவலாம்.

**புதியபூமி அஞ்சலி செலுத்துகிறது**

மார்க்சிச மனித நேயவாதியும் சிறந்த மக்கள் எழுத்தாளருமான சமூக அக்கறைமிக்க கல்வியாளருமான யோ. பெனடிக்ற் பாலன் 30.07.97ல் இயற்கை எய்திவிட்டார். அவரது மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து புதிய பூமி அஞ்சலி செலுத்துகிறது.

ஆசிரியர் குழு

வெளியிடுபவர் : இளையதம்பி தம்பையா, இல14, 57வது ஒழுங்கை, கொழும்பு -06. பிரசுரம்: நவமக அச்சகம், 334 காலி வீதி இரத்மலானை